Registered as a Newspaper | பக்கங்கள் 12 | விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 86

செவ்வாய்க்கிழமை
20 பெப்ரவரி 2024

மாசி 08 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

முச்சந்தி முரளி



"கப்பலோட்டின பரம்பரையில வந்த எங்களுக்கு கப்பல் கட்டுறதும் கஷ்டமில்லை கண்டியளோ"

# வடக்கு - கிழக்கு தமிழரின் பிரச்சினையைத் தீர்க்கப் பேச்சு!

## முன்னெடுக்கிறாராம் ரணில்

கொழும்பு, பெப்ரவரி 20

வடக்கு - கிழக்கு தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான பேச்சுகளை முன்னெடுத்து வருகின்றோம். அதன்பின்னர் மலையகத் தமிழர் மற்றும் முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளும் தீர்க்கப்படவேண்டும். இந்தப்பிரச்சினைகளைத் தீர்த்து, இந்த நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தி, முன்னோக்கிப் பயணிக்கவேண்டும். இந்தப் பயணத்துக்கு நாம் தயாராகவேண்டும் - இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

11

## கிளிநொச்சியில் இன்று போராட்டம்

கிளிநொச்சி, பெப். 20

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் தொடர் போராட்டம் வலி நிறைந்த ஏழு ஆண்டுகளைக் கடந்து இன்று எட்டாவது ஆண்டில் கால்பதிக்கிறது. இந்நாளை அடையாளப்படுத்தும் முகமாக கிளிநொச்சி

11



## சிறுமி படுகொலை; நீதிகோரி போராட்டம்

மன்னார், பெப். 20

தலைமன்னாரில் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட சிறுமிக்கு நீதிகோரி மன்னார் நீதிவான் நீதிமன்ற வளாகத்துக்கு முன்பாக நேற்றுப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

11

## பேருந்தின் அவசரத்தால் பெண்ணொருவர் சாவு!

### அல்லைப்பிட்டியில் சம்பவம்

யாழ்ப்பாணம், பெப். 20

அல்லைப்பிட்டியில் நேற்றுக்காலை இடம்பெற்ற விபத்தில் காயமடைந்த பெண்ணொருவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் உயிரிழந்துள்ளார்.

மண்கும்பான் 4ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த தங்கரத்தினம் தனஸ்வரி (வயது-46) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

11

## குடாநாட்டில் 2023 இல் 1,558 காணிகள் ஈடுவைப்பு

யாழ்ப்பாணம், பெப். 20

யாழ்ப்பாணக் குடாநாட்டில் கடந்த ஆண்டு மாத்திரம் வங்கிகளிடமும் தனியாரிடமும் ஆயிரத்து 558 காணிகள்

11

## பெண் அதிபர் நியமனம்; மத்திய கல்லூரியில் எதிர்ப்பு!

யாழ்ப்பாணம், பெப். 20

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கு புதிதாகப் பெண் அதிபர் நியமிக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்றுக்காலை கல்லூரிக்கு முன்பாக போராட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

'208 ஆண்டுகளைக்

11

## யாழில் கட்டப்பட்ட சுற்றுலாக் கப்பல்


யாழ்ப்பாணம், பெப். 20

காரைநகரில் அமைந்துள்ள கப்பல் கட்டும் தொழிற்சாலையில் பர்மா நாட்டுக்கு

11

## யாழ்., தொல்புரத்தில் சிறுமி கடத்தல் சிறுவன் கைது

விரிவு:- பக்.11



## தேசிய மின் வழங்கலுடன் இணையும் யாழின் தீவுகள்

யாழ்ப்பாணம், பெப். 20

யாழ்ப்பாணக் குடாநாட்டின் நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு ஆகிய தீவுகளை முதன்முறையாக தேசிய மின் வழங்கலுடன் இணைக்கும் செயற்றிட்டம் 184 மில்லியன் ரூபா செலவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக குறிகாட்டுவான் முதல் நயினாதீவுக்கும் தொடர்ந்து நயினாதீவு முதல் அனலைதீவுக்கும், அனலைதீவு முதல் எழுவைதீவுக்கும் இடையிலான மின் இணைப்பு கலுக்குள் கோபுரம் அமைத்து அதன்வழியாக இடம்பெறவுள்ளது.

இது தொடர்பில் இலங்கை மின்சார சபையின் வடக்குக்கான பிரதிப் பொது முகாமையாளர் பிரபாகரனை தொடர்பு கொண்டு கேட்டபோது;

11



அரசாங்க ஊழியராகிய உங்களுக்காக இலங்கை வங்கி அறிமுகப்படுத்தும் பிரத்தியேகமான கடனட்டை

உங்களின் தேவைகளுக்கு பக்க பலமாக அமையும் கடனட்டை

- கையில் காசில்லாத போது பொருட்களை கொள்வனவு செய்யும், கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் வசதி
- சில்லறை விற்பனை நிலையங்கள், சுப்பர் மார்க்கெட்டுகள், ஆடை விற்பனை நிலையங்கள் மற்றும் உணவகங்களில் பணம் செலுத்தக் கூடிய வசதி
- தேர்ந்தெடுக்கப்பட்ட விற்பனை நிலையங்களில் விசேட கழிவுகள்
  Online பண பரிவர்த்தனை (e-commerce) வசதிகள்
- உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட அட்டைகள்

இணைவுக் கட்டணங்கள் இல்லை • 52 நாட்கள் வரையில் வட்டியில்லா மீளச் செலுத்தும் வசதி

BOC CARDS UNSTOPPABLE YOU

தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல. 1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.

இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சர் ஹரினின் கருத்து இறைமைக்கு எதிரான கூற்று!

## தயாரத்ன தேரர் ஆவேசம்

**கொழும்பு, பெப். 20**

**இலங்கை என்பது இந்தியாவின் ஒரு பிரிவாகும் என அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தமை நாட்டின் இறையாண்மை மற்றும் சுயாதீனத்துக்கு எதிரான அறிவிப்பாகும் - இவ்வாறு நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் அக்மீமன தயாரத்ன தேரர் தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"இலங்கையை இந்தியாவின் ஒரு பிரிவாகக் கருதுமாறு அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ கூறியுள்ளார். இவ்வாறானதொரு அறிவிப்பை விடுப்பதற்கு அவருக்கோ அல்லது தற்போதைய ஜனாதிபதிக்கோ மக்கள் ஆணை இல்லை. இது நாட்டைக் காட்டிக்கொடுக்கும் செயல். தவறானதொரு அறிவிப்பு. நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் மற்றும் ஜனாதிபதிகள் பதவியேற்கும்போது நாட்டை பிரிக்கும் வகையிலான செயற்பாடுகளுக்கு உள்நாட்டிலோ அல்லது வெளிநாட்டிலோ ஆதரவு வழங்கப்படமாட்டாது. அனுசரணை வழங்கப்படமாட்டாது என உறுதியளிக்கின்றனர். இந்த உறுதிமொழியை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ மீறிவிட்டார்.

இலங்கை என்பது சுயாதீன நாடு. இது பிற நாடுகளின் காலனியோ அல்லது பிரிவோ அல்ல. அமைச்சரின் இந்த அறிவிப்புத் தொடர்பில் அமைச்சரவையும், அரசும் தெளிவுபடுத்தவேண்டும்" - என்றார்.

(ம-44)

# ஹரினின் கருத்து பாரதூரமானது

## சாடுகின்றார் விமல்

இலங்கை இந்தியாவின் ஒரு பகுதி எனச் சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ பகிரங்கமாகக் கூறியிருப்பது பாரதூரமான கருத்து என்று நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ சாடியுள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்துள்ளதாவது:-

இலங்கை இந்தியாவின் ஒருபகுதிஎன்பதுகோழைத்தனமானது. இலங்கையில் இந்திய அடிமைத்தனம் எவ்வளவு தீவிரமாக இருக்கிறது? இந்த அரசாங்கமும், ஆட்சியில் ஒட்டிக்கொண்டிருக்கும் எதிர்க்கும்பல்களும் எந்த அளவுக்குக் கீழ்ப்படிந்திருக்கிறார்கள்? நாடாளுமன்ற உறுப்பினராக சத்தியப்பிரமாணம் செய்யும்போது நாட்டின் ஐக்கியத்தையும் இறையாண்மையையும் பாதுகாப்பதாகக்கூறிவிட்டு, அதை எந்த நாடாளுமன்ற உறுப்பினரும் மீற முடியாது - என்றார். (எ-இ)

# கெஹலியவின் மருத்துவச் சான்றிதழை சோதிக்க உத்தரவு

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல சமர்ப்பித்த மருத்துவச் சான்றிதழ்களை இரண்டு தடவை பரிசோதித்துப் பார்க்குமாறு மாளிகாகந்த நீதிபதி லோசனா அபயவிக்கிரம உத்தரவிட்டுள்ளார்.

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தனக்கு உடல்நிலை சரியில்லை எனக்கூறி நீதிமன்றத்துக்குச் சமுகமளிக்கவில்லை. அதையடுத்து சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவின் உடல்நிலையைப் பரிசோதித்து இந்த மாதம் 29 திகதிக்கு முன்னதாக அறிக்கை சமர்ப்பிக்கவேண்டும் என்று நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (எ-6)

# வலைத்தள படங்களில் போலி அ. அட்டைகள்

## சந்தேகநபர்கள் சிக்கினர்

கொழும்பு, பெப். 20

வங்கிக் கணக்குகளை ஆரம்பிப்பதற்குப் போலி ஆவணங்களைத் தயாரித்த குற்றச்சாட்டில் இரண்டு சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

சந்தேகநபர்களிடமிருந்து 28 போலி தேசிய அடையாள அட்டைகள், 32 போலிச் சாரதி அனுமதிப்பத்திரங்கள், 3 கையடக்கத் தொலைபேசிகள், 5 போலி தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரங்கள், 18 சிம் கார்ட்கள் என்பன கைப்பற்றப்பட்டன.

போலித் தேசிய அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம் போன்ற பிற ஆவணங்களைத் தயாரிக்க அவர்கள் சமூக ஊடகங்களிலிருந்து தகவல் மற்றும் படங்களைப்பெற்றுள்ளமையும் விசாரணையில் தெரிய வந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ச-இ)



சமகால அரசியல் நகர்வுகள் குறித்து தமிழரசுக் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சிவஞானம் சிறீதரனால் மாவட்டம் தோறும் மேற்கொள்ளப்படுகின்ற கிராம மட்டக் கலந்துரையாடல் கிளிநொச்சி, பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. (ப-66)

# சர்ச்சையான கருத்து ஹரின் மீது வழக்கு!

கொழும்பு, பெப். 20

அமைச்சர் ஹரின் பெர்னாண்டோவுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதற்கு சட்ட ஆலோசனை பெறப்படுகிறது என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் செயலாளர் நாயகம் கலாநிதி வசந்த பண்டார தெரிவித்துள்ளார்.

அண்மையில் இந்தியாவில் அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ இலங்கை இந்தியாவின் ஒருபகுதி என பிரகடனப்படுத்தியுள்ளமை அரசமைப்பை மீறும் செயலாகும். அந்தவகையில் இலங்கையின் இறையாண்மையை மீறும் அமைச்சருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

# சனத் நிஷாந்தவுக்கு அனுதாபப் பிரேரணை

வாகன விபத்தில் உயிரிழந்த இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் பிரேரணை மீதான விவாதம் எதிர்வரும் 22ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நடைபெறவுள்ளது.

நாடாளுமன்றம் நாளை முற்பகல் 9.30 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் கூடவுள்ளது. வெள்ளிக்கிழமை பௌர்ணமிதினம் என்பதால் இம்முறை 3 நாள்கள் மட்டுமே நாடாளுமன்றம் கூடுகின்றது.

22ஆம் திகதி ஆரம்பகட்ட சபை நடவடிக்கைகள் முடிவடைந்த பின்னர் அனுதாபப் பிரேரணை மீதான விவாதம் ஆரம்பமாகி, மாலை 5.30 மணிவரை விவாதம் இடம்பெறும். (ம-44)

# மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றியதாம் பெரமுன

## அந்தக் கட்சி எம்.பி. பெருமிதம்

கொழும்பு, பெப்.20



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியென்பது மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றிய கட்சியாகும். அதனால் தேர்தலை எதிர்கொள்வதற்கு அஞ்சவில்லை என்று அந்தக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும், இராஜாங்க அமைச்சருமான இந்திக அனுருத்த தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதி வேட்பாளரை மொட்டுக் கட்சி இன்னும் தேர்வு செய்யவில்லை. ஏனைய சில கட்சிகள் வேட்பாளர்களைப் பெயரிட்டிருந்தாலும் இறுதி நேரத்தில் அது மாறலாம். தேர்தல் அட்டவணையின் பிரகாரம் எதிர்வரும் ஒக்ரோபர் மாதத்துக்குள் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படவேண்டும்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியென்பது பொறுப்புடன் செயற்படும் கட்சியாகும். தேர்தல்களை எதிர்கொள்வதற்கு எமது கட்சிக்கு அச்சம் கிடையாது. தேர்தல்களில் தொடர்ச்சியாக வெற்றிபெற்ற கட்சியே எமது கட்சியாகும். மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றிய கட்சியாகும். அடுத்த தேர்தலில் வெற்றிபெற முடியும் என்ற நம்பிக்கை உள்ளது - என்றார். (எ-44)

# குப்பைவேலைகளைச்செய்யாது பிரிந்து செல்லலாம் பொன்சேகா

## மரிக்கார் எம்.பி. கூறுகின்றார்

கொழும்பு, பெப்.20

ரணில்தான் வேண்டுமெனில் சஜித் பிரேமதாஸவுக்கு 'குட்பாய்' கூறிவிட்டு சரத் பொன்சேகா விடைபெறலாம். அதைவிடுத்து குப்பை அரசியல் நடத்தக்கூடாது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதித் தேசிய அமைப்பாளரான நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளர் பதவியில் இருந்து தன்னை நீக்கக் கூடாது எனக் கோரி நீதிமன்றத்தை நாடுவதற்கு சரத் பொன்சேகா திட்டமிட்டுள்ளார் என அறியமுடிகின்றது. வழக்குத் தொடுப்பதற்கு முன்னர் எமக்கும் அவர் நோட்டீஸ் ஒன்றை அனுப்பட்டும். அப்போது அவரை நீக்க வேண்டிய காரணம் என்னவென்பதைத் தெளிவுபடுத்துவோம்.

இரவுநேரங்களில் அவர் ரணிலை, டயானாவின் வீட்டில் சந்திக்கின்றார். டயானாவின் கணவர் பொன்சேகாவின் செயலாளராக இருந்தவர்.

இது குப்பை வேலை. ஒன்று ஐக்கிய மக்கள் சக்தியுடன் இருக்கவேண்டும், இல்லையேல் ரணில் தரப்புக்குச் செல்ல வேண்டும்.

தன்னை இராணுவத்தளபதி ஆக்கியவரை பொன்சேகா பகைத்துக் கொண்டார், பீல்ட்மார்ஷல் ஆக்கியவருடனும் முரண்பட்டார். அரசியலில் அநாதையானபோது அழைத்துவந்து அமைச்சுப் பதவி கொடுத்தவருடனும் கோபித்துக்கொண்டார். தன்னைக் கட்சியின் தவிசாளர் ஆக்கியவருக்கும் பொன்சேகா அவ்வாறு செய்யலாம்.

கட்சிக்குள் பிரச்சினையெனில் கட்சி மட்டத்தில் அதைத் தீர்க்கவேண்டும். மாறாக பொதுவெளியில் கூளுரைத்து போலிவீரர் ஆகக்கூடாது" - என்றார்.

(எ-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஜூன் மாதத்துக்குள் கடன் மறுசீரமைப்பு

**கொழும்பு, பெப். 20**

**எதிர்வரும் ஜூன் மாதத்துக்குள் நாட்டின் கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளை நிறைவு செய்வதே அரசாங்கத்தின் இலக்கு என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.**

"கடன் மறுசீரமைப்புத் தொடர்பில் கடன் வழங்கும் நாடுகளுடனான பேச்சுகள் எதிர்வரும் மார்ச் மாத இறுதிக்குள் நிறைவடையும்.

எதிர்வரும் ஏப்ரல் மாதத்துக்குள் இறையாண்மைப் பத்திரங்கள் தொடர்பான கலந்துரையாடல்களை நிறைவு செய்யமுடியும்" என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## சிக்கல் நிலையில் சத்திரசிகிச்சைகள்

கொழும்பு, பெப். 20

இலங்கையின் மருத்துவமனைகளில் சத்திரசிகிச்சை உபகரணங்களுக்கு பெருமளவில் தட்டுப்பாடு நிலவி வருகின்றது என்று சிவில் உரிமைகள் தொடர்பான மருத்துவ தொழிற்சங்க ஒன்றியம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதுதொடர்பில் அதன் தலைவர் நிபுணத்துவ மருத்துவர் சமால் சஞ்சீவ தெரிவிக்கையில்;

சத்திரசிகிச்சை உபகரணப் பட்டியலில் முன்னுரிமை அடிப்படையில் சுமார் 3 ஆயிரத்து 800 உபகரணங்கள் தட்டுப்பாடாக உள்ளன.

இந்த நிலைமைக்கு இன்னும் இரண்டு மூன்று வாரங்களுக்குள் தீர்வு காணப்படாவிட்டால் மருத்துவமனைக் கட்டமைப்பில் நெருக்கடி நிலைமை ஏற்படலாம் என்றும் அவர் எச்சரித்துள்ளார். (ச-இ)

## 'பாரத்- லங்கா' வீடுகள்: மலையகத்தில் அடிக்கல்

கொழும்பு, பெப். 20

மலையகத்துக்கான 10 ஆயிரம் 'பாரத் - லங்கா' எனும் வீட்டுத் திட்டம் நேற்று திங்கட்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வழிகாட்டலில் இந்திய அரசின் நிதி உதவியுடன் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் இதனை அங்குரார்ப்பணம் செய்துவைத்தார்.

முதற்கட்டமாக நுவரெலியா, கண்டி, பதுளை, மாத்தளை, கேகாலை, குருநாகல், இரத்தினபுரி, காலி, களுத்துறை மற்றும் மொனராகலை ஆகிய 10 மாவட்டங்களை உள்ளடக்கி ஆயிரத்து 300 வீடுகள் ஒரே தடவையில் நிர்மாணிக்கப்படவுள்ளன. (ச-இ)

## ஐ.எம்.எப். திட்டங்கள் பிசகினால் பின்னடைவு

### மத்திய வங்கி எச்சரிப்பு

கொழும்பு, பெப். 20

சர்வதேச நாணயநிதியத்தின் திட்டத்தை முன்னெடுக்க முடியாத நிலைமை ஏற்பட்டால் நாட்டுக்குப் பொருளாதார ஆபத்து ஏற்படும் என்று இலங்கை மத்திய வங்கி எச்சரித்துள்ளது.

உலக பொருளாதார வீழ்ச்சியால் ஏற்றுமதிக்கு ஏற்பட்டுள்ள ஆபத்துக்கு மத்தியில் பொருளாதார நெருக்கடியிலிருந்து இலங்கை மீண்டு வருகின்றது.

இந்தநிலையில் சர்வதேச நாணயநிதியத்தின் திட்டம் தடம்புரண்டால் மிகப் பெரியபொருளாதார ஆபத்து நாட்டுக்கு ஏற்படலாம்.

சர்வதேச நாணயநிதியத்தின் திட்டத்துக்கு ஏதேனும் இடையூறு ஏற்படும் பட்சத்தில் நம்பிக்கையின்மை, எதிர்மறை உணர்வுகள் காரணமாக பொருளாதார இழப்பை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்றும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (ச-இ)



இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா அண்மையில் மன்னாருக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்த நிலையில், இராமர் – சேது பாலத்தில் அவர் சிறப்பு வழிபாடுகளிலும் ஈடுபட்டார். இவ்விஷேட பூஜை மன்னார் திருக்கேதீஸ்வரக் குருக்கள் சிவ ஸ்ரீ தியாகராஜா கருணானந்தனால் மேற்கொள்ளப்பட்டது. (ம-60)

## இளையோர் புலம்பெயர்வு பொருளாதாரம் மந்தநிலை

### மத்தியவங்கி சுட்டிக்காட்டு

கொழும்பு, பெப். 20

திறன்மிக்க இளைஞர்களின் புலம்பெயர்வு காரணமாக இலங்கையின் பொருளாதாரத்தில் மிகப்பெரிய தாக்கம் ஏற்பட்டுள்ளது.

மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கையில் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சர்வதேசமட்டத்தில் சாதகமற்ற போக்குகள் ஏற்றுமதித் துறையின் மீட்சியையும், திறன்மிக்க இலங்கைத் தொழிலாளர்கள் வெளிநாடுகளுக்கு படையெடுப்பது உற்பத்தித் திறனையும் பாதிக்கின்றது.

இதனால் குறுகியகால மற்றும் நீண்டகால பொருளாதார வளர்ச்சி குறையும் அபாயம் ஏற்படும்.

தற்போதைய கணிப்பின் பிரகாரம் குறுகிய காலத்துக்குள் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி மெதுவாகவே படிப்படியாக வளர்ச்சி நிலைக்கு வரும் எனவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ச-இ)

## சிறுவர் துஷ்பிரயோகம் 10 ஆண்டுகள் கடூழியச் சிறை

கொழும்பு, பெப்.20

ஆண் சிறுவர்கள் மீதான பாலியல் வல்லுறவுக்கு 10 வருட கடூழிய சிறைத்தண்டனை வழங்கலாம் என வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் ஆண் சிறுவர்கள் மீதான பாலியல் வன்புணர்வுக்கு ஐந்து வருட சிறைத்தண்டனை வழங்கப்பட்டு வந்தது. புதிய சட்டத்திருத்தத்தின்படி 22 வயதுக்குக் குறைந்த ஆண்களைப் பாலியல் வன்புணர்வுக்குள்ளாக்கிய குற்றத்துக்குப் பத்து வருடங்கள் சிறைத் தண்டனை விதிக்கலாம் என சட்டத்திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ம-6)

## தினம் தெரியுமோ?

**யா**ழ்ப்பாணத்தில நித்தியமா உள்ள ஒரு கல்லூரியில நேற்று ஆர்ப்பாட்டம். விசயம் என்னெண்டால், '208 வருசமா தொட்டுத் தொடரும் பட்டுப்பாரம்பரியம் கொண்ட' தனியப் பெடியள் மட்டும் படிக்கிற பள்ளிக்கூடத்துக்கு பெண் அதிபரைப் போடக் கூடாதாம். கொஞ்சக்காலமா அந்தப் பள்ளிக்கூடம் பிரின்சிப்பல் இல்லாமல் தான் இயங்கிக்கொண்டு வருகுது. இலங்கைக் கல்வி நிர்வாக சேவையைச் சேர்ந்த ஒருத்தர்தான் பதில் அதிபரா இருக்கிறார். அவர் ஏற்கனவே இன்னொரு பள்ளிக்கூடத்தில இருக்கேக்க, இந்தக் கல்லூரிக்கு வந்தால் அதிபராக்கலாம் எண்டு அமைச்சர் வாசிச்ச வீணைக்கு மயங்கித்தான் இஞ்ச வந்தவர். ஆனால் வீணை வாசிப்பெல்லாம் வீணாப் போன கதையா, அவருக்குப் பதிலா அந்தப் பள்ளிக்கூடத்தில பிரதி அதிபரா இருந்தவாக்குத்தான் நியமனம் குடுபட்டிருக்கு. அதுக்கும் ஒரு காரணம் இருக்குது.

உந்தப் பள்ளிக்கூடம் தேசிய பாடசாலை எண்டதால, தேசிய பொதுச்சேவை ஆணைக்குழுதான் அந்தப் பள்ளிக் கூடத்துக்கான அதிபரின்ர தரம் பற்றி தீர்மானிக்கோணும். அதின்படி அதிபர் தரம் I ஐச் சேர்ந்தவைதான் உந்தக் கல்லூரிக்கு அதிபரா இருக்கலாமாம். ஆனால் அதிபர் பதவியை எதிர்பார்த்து வேற பள்ளிக்கூடத்தில இருந்து வந்தவர் அதிபர் தரத்தை விட கூடின இலங்கை நிர்வாக சேவையைச் சேர்ந்தவர். ஓவர் தகுதியும் பதவிக்கு ஆகாது கண்டியளோ. பள்ளிக்கூடத்துக்கு அதிபரைத் தெரிவு செய்யிறதுக்கு நடந்த இன்ரர்வியூவுக்கு, அதிபர் தரம் I ஐச் சேர்ந்தவையைத் தான் கூப்பிடலாம். அதின்படிதான் இவ்வளவு காலமும் பிரதி அதிபரா இருந்தவாக்கு தகுதி இருந்ததால, அவாவையே அதிபராத் தெரிவு செய்திருக்கினம்.

ஆனால் இது வீணைக்கார அமைச்சருக்குப் பிடிக்கேலை. 'நான் கொண்டு வந்த ஆளுக்கு குடுக்காமல், அவரை விட தகுதி குறைஞ்ச ஒராளுக்கு குடுத்திட்டினம். ஆனால் உதை நான் சும்மா விடமாட்டன். நான் சொன்னதைச் செய்வன், செய்யிறதைத்தான் சொல்லுவன்' எண்டு 'பஞ்ச்' வசனமெல்லாம் பேசி, வேட்டியை மடிச்சுக் கொண்டு தன்ர ஆக்களை போராடச் சொல்லிக் களத்தில இறக்கி விட்டிட்டார். ஏற்கனவே பள்ளிக்கூட பழைய மாணவர் சங்கமும் இந்த விசயத்தில ரண்டாத்தான் பிரிஞ்சு நிக்குது. அதில தனக்குச் சாதகமான ரீமை, இப்ப அதிபரா வரப்போறவாக்கு எதிரா ஏதும் காரணம் சொல்லிப் போராடுங்கோ எண்டு தியேட்டரில இருந்து ஓர்டர் போயிருக்குதாம். ஆனால் அவைக்கு என்ன காரணத்தைச் சொல்லிப் போராடுறது எண்டு ஒண்டும் பிடிபடேலை. அதுக்குப் பிறகுதான் 'இது ஆம்பிளைப் பிள்ளையள் படிக்கிற பள்ளிக்கூடம். பெண் அதிபர் வேண்டாம்' எண்டு பிரிசில் போர்ட்டை பிடிச்சுக்கொண்டு நிண்டிருக்கினம். ஒருகதைக்கு ஆம்பிளைப் பிள்ளையள் படிக்கிற பள்ளிக்கூடத்துக்கு பெண் அதிபர் வேண்டாம் எண்டால், அந்தப் பள்ளிக்கூடத்தில் பொம்பிளை ரீச்சர் மாருமெல்லோ படிப்பிக்கக் கூடாது. அதைவிடப் பகிடி என்னெண்டால், இப்ப அதிபரா தெரிவுசெய்யப்பட்டிருக்கிறவா, அதே பள்ளிக்கூடத்தில இவ்வளவு நாளும் பிரதி அதிபரா இருந்தவா. அப்ப 'பெண் பிரதி அதிபர் இருக்கக் கூடாது' எண்டு ஏன் போர்க்கொடி தூக்கேலை. சரி, இவை சொல்றபடி அதிபர் சேவை தரம் I இல இருக்கிற ஒரு ஆண் அதிபரை உதே பள்ளிக்கூடத்துக்கு போட்டால், போராட்டத்தை கைவிட்டிடுவினமோ? இல்லைத்தானே. எல்லாமே அரசியலா மாறினா இப்பிடி தொட்டதுக்கும் போராடிப் போராடியே எங்கட சனம் மாய வேண்டியது தான். இதுக்குள்ள அந்த பதில் அதிபர்தான் பாவம், திறமை, தகுதி எல்லாம் கூடவா இருந்தும் அமைச்சரின்ர சொல்லைக் கேட்டு, சேராத இடம் சேர்ந்ததால வஞ்சத்தில வீழ்ந்து நெஞ்சாரத் துயர்ப்படுறார்.


-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 36ஆவது அகவை நாள் நினைவஞ்சலி

## அமரர் கிருபாமூர்த்தி சிந்துஜன்



அன்னை மடியில்
20.02.1988

கந்தன் அடியில்
26.06.2021





மீளாத்துயில் கொண்டு - எம்மை
ஆறாத்துயரில் ஆழ்த்திச் சென்றாயே !
கண்முன்னே வாழ்ந்த காலம் கனவாகியதே !
உன் நினைவுகள் என்றும் நிஜமாகியதே ! அரன்
திருவடியில் உன் ஆன்மா அமைதி பெற - உன்
பிறந்த நாளில் குதூகலிக்க நீயின்றி
நிறைந்த நின் நீங்கா நினைவுகளுடன் நாம் !

இள வயதினிலேயே உற்றார் மெச்ச வாழ்ந்தவனே !
அளவிட முடியா அன்பு பொழிந்தவனே !
உனது இருப்பு இன்றி இங்கு நாம் தவிக்கிறோம்
நினைவெல்லாம் உனைச் சுமந்து விழிநீர் வடிக்கின்றோம்
இன்னுயிர் துறந்து மண்ணுலகம் சென்றாயே!
அண்ணல் உன்னை அனுதினமும் ஆராதிக்கின்றோம் ! உம்
அகவை நாளில் - எம் கண்ணீர்ப் பூக்களை சமர்ப்பிக்கின்றோம்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

"அக்கா அகம்"
சிந்துஜன் ஒழுங்கை,
கே.கே.எஸ். வீதி,
இணுவில்.

உன் நினைவுகளுடன்
குடும்பத்தினர்


# 5 கிராம் ஹெரோய்னுடன் 4 இளைஞர்கள் கைது

யாழ்ப்பாணம், பெப். 20

5 கிராம் 465 மில்லிகிராம் உயிர்கொல்லி ஹெரோய்னுடன் நான்கு இளைஞர்களை கோண்டாவில் வீதி, இருபாலையில் வைத்து கைது செய்துள்ளதாக கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

புலனாய்வுத் தகவலுக்கமைய கோண்டாவில், இருபாலை வீதிக்கு விரைந்த பொலிஸார் 2 கிராம் 350 மில்லிகிராம் ஹெரோய்னுடன் 31 வயதான ஒருவரையும், 85 மில்லி கிராமுடன் 24 வயதான இளைஞர் ஒருவரையும், 2 கிராம் 20 மில்லிகிராமுடன் 25 வயதான இளைஞரையும், 1 கிராம் 10 மில்லிகிராம் ஹெரோய்னுடன் 24 வயதான இளைஞரையும் கைது செய்தனர். இவர்களிடமிருந்து உயிர்கொல்லி ஹெரோய்ன் நுகர்வதற்குப் பயன்படுத்தியதாக நம்பப்படும் சிறின்ஞையும் மீட்டுள்ளனர்.

கைதான இளைஞர்கள், குருநகர் பகுதியிலேயே உயிர்கொல்லி ஹெரோய்னைக் கொள்வனவு செய்ததாக விசாரணைகளின்போது தெரிவித்துள்ளனர். (ஓ-125)

# பழுதடைந்த உணவுகள்: உணவகங்கள் சிக்கின

நாவாந்துறை மற்றும் புத்தூர்ப் பகுதிகளில் பழுதடைந்த உணவுப்பொருள்களை விற்பனை செய்த இரண்டு உணவகங்களுக்குத் தண்டம் விதிக்கப்பட்டுள் ளது.

அந்தந்த சுகாதாரப் பிரிவினரால் குறித்த பகுதியிலுள்ள உணவகங்கள் நேற்று திடீர்ப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபோதே இவை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

அந்த உணவக உரிமையாளர்களுக்கு எதிராக வழக்குப் பதிவு செய்து மல்லாகம் மற்றும் யாழ்ப்பாணம் நீதிமன்றங்களில் முற்படுத்தப்பட்டனர். புத்தூர் உணவகத்துக்கு 65 ஆயிரம் ரூபா தண்டமும் நாவாந்துறை உணவகத்துக்கு 72 ஆயிரம் ரூபா தண்டமும் நீதிமன்றால் விதிக்கப்பட்டது. (ச-17)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். சகோதரர்கள் குடும்ப விஷயமாக உங்கள் யோசனையைக் கேட்டு வருவார்கள். முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்த நாள். இளைய சகோதரர்கள் உதவிகரமாக இருப்பார்கள். மனதில் ஏற்பட்டிருந்த குழப்பங்கள் நீங்கும்.

**இடபம்:** எதிர்பாராத செலவுகள் ஏற்பட வாய்ப்பு இருப்பதால் சிலர் கடன் வாங்கவும் நேரிடும். மற்றவர்களிடம் பேசும்போது நிதானம் அவசியம். சங்கடங்கள் நீங்கும். உழைப்பால் உயரும் நாள். வியாபாரம் தழைக்கும். சலுகைகள் கிடைக்கும்.

**மிதுனம்:** மனதுக்கு மகிழ்ச்சி தரும் சம்பவம் நடைபெறும். மனவருத்தங்கள் நீங்கும். எதிர் பார்த்த காரியம் சாதகமாக முடியும். லாபம் அதிகரித்தாலும், பணியாளர்களால் வீண் செலவுகள் ஏற்படக்கூடும்.

**கடகம்:** தேவையான பணம் இருந்தாலும் திடீர் செலவுகளும் ஏற்பட்டு கையிருப்பைக் குறைக்கும். ஒரு சிலருக்கு ஆதாயம் உண்டாகும். அனுசரித்துச் செல்வது நல்லது. மன அமைதி ஏற்படும்.

**சிம்மம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். விற்பனையும் லாபமும் உண்டாகும்.

**கன்னி:** புதிய முயற்சிகளைத் தவிர்த்துவிடவும். உறவினர்கள் வகையில் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும். பொறுமை அவசியம். மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். வியாபாரத்தில் விற்பனை வழக்கத்தைவிட அதிகமாக இருக்கும்.

**துலாம்:** காரியங்கள் அனுகூலமாகும். தேவையான பணம் கிடைக்கும். ஆதாயம் உண்டாகும். உற்சாகம் பிறக்கும். வியாபாரத்தில் விற்பனையை அதிகரிக்கக் கூடுதல் உழைப்பு தேவைப்படும்.

**விருச்சிகம் :** புதிய முயற்சிகளில் ஒரு முறைக்குப் பலமுறை யோசித்து ஈடுபடவும். உடல்நலனில் கவனம் தேவை. வீட்டுப் பராமரிப்புச் செலவுகள் ஏற்படும். விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது.

**தனுசு:** பிள்ளைகளின் பணிகளில் அவர்களுக்கு உதவி செய்வீர்கள். அவப்பெயர் நீங்கும். வியாபாரம் வழக்கம்போலவே இருக்கும். . உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். புத்துணர்ச்சி பெருகும் நாள்.

**மகரம்:** பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்ற முயற்சி செய்யவும். எதிரிகளின் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். எதிர்பாராத பணவரவு மகிழ்ச்சி தரும். ஆதாயம் கிடைக்கும். உங்கள் முயற்சிகளுக்கு ஆதரவு கிடைக்கும்.

**கும்பம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும் நாள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். தாயிடம் கேட்ட உதவி கிடைக்கும். உடல் நலனில் கவனம் தேவை. சிலருக்கு எதிர்பாராத செலவுகளுடன் தேவையற்ற அலைச்சலும் ஏற்படக்கூடும்.

**மீனம்:** எதிலும் நிதானமாகச் செயற்படவும். உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். வீண்விவாதம் ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. சுமுகமான உறவை ஏற்படுத்திக்கொள்ள முயற்சி செய்யவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்


மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## வலிந்துபெறும் நெருக்கடி!

ஈரானின் மிகச்சிறந்த தந்திரியும், அமெரிக்க எதிர்ப்பு மனோநிலையில் ஊறித்திளைத்தவரும், வெளிவிவகார அமைச்சருமான ஹொசைன் அமீர் அப்துல்லாஹியன் மூன்று நாள்கள் பயணமாக இலங்கைக்கு வந்திருக்கின்றார். ஈரானிடமிருந்து இலங்கை பெற்றுக்கொண்ட 'உமா ஓயா' அபிவிருத்தித் திட்டம், எரிசக்தி ஒப்பந்தங்கள் குறித்து இந்தப் பயணத்தின்போது இருதரப்பும் கவனம் செலுத்தும் - விவாதிக்கும். நாணயங்களால் பிணைக்கப்பட்ட நிகழ்கால உலகில் ஒரு நாடு இன்னொரு நாட்டுடன் தன் தொடர்பை வலுப்படுத்துவது தவிர்க்கப்படமுடியாததுதான். ஆனால், கடந்த மூன்று வாரங்களாக நிகழும் அதியுச்சப் போர் நெருக்கடிக்கு மத்தியில் ஈரான் வெளிவிவகார அமைச்சரின் இலங்கைப் பயணம், இலங்கைக்கே தேவையற்ற இராஜதந்திர நெருக்குவாரங்களை ஏற்படுத்தவல்லது. ஏனெனில் இங்கு இலங்கை, அமெரிக்காவை நேரடியாகப் பகைக்கத் தலைப்பட்டுள்ளது.

கடந்த மூன்று வருடங்களாக அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையிலான உறவில் பெருவிரிசல் ஏற்பட்டுள்ளது. அணுவாயுதங்களுக்குத் தேவையான யுரேனியத்தைச் சட்டவிரோதமாகச் செறிவூட்டுகின்றது என்று தெரிவித்த அமெரிக்கா ஏகப்பட்ட பொருளாதாரத் தடைகளை ஈரான் மீது திணித்து வைத்திருக்கின்றது. அதுமட்டுமல்லாமல், ஈரானிய இராணுவத் தலைவர்களை இலக்குவைத்துக் கொலை செய்யுமளவுக்கு இந்த விடயத்தில் அமெரிக்கா அதிதீவிரமாக இயங்கி வருகின்றது. ஈரானின் போர்த்தந்திரி என்று அறியப்படும் சுலைமானி அமெரிக்காவின் 'ட்ரோன்' தாக்குதலில் கொல்லப்பட்டமைகூட இதே பின்புலத்தில்தான். அண்மையில் ஜோர்தானில் உள்ள அமெரிக்கப் படைத்தளத்தின்மீதுநடத்தப்பட்ட தாக்குதலில் அமெரிக்கச் சிப்பாய்கள் மூவர் கொல்லப்பட்டதன் பின்புலத்திலும் ஈரானே உள்ளது என்று அமெரிக்கா ஆழமாக நம்புகின்றது. இதனால் எந்தநாடுகள் எல்லாம் ஈரானை ஆதரிக்கின்றனவோ - அணுகுகின்றனவோ தூதரக உறவுகளை ஈரானுடன் வலுப்படுத்துகின்ற னவோ அவற்றை 'தீட்டு நாடுகளாக' கருதி தன் நட்பு வட்டாரத்துக்குள் இருந்து தொலைதூரத்தில் அமெரிக்கா தள்ளியே வைக்கும். உலக அரசியலில் அண்மைய நகர்வுகள் பலவும் அதையே கட்டியம் செய்கின்றன. இவ்வாறானதொரு பின்னணியில் ஈரானிய வெளிவிவ கார அமைச்சர் இலங்கைக்கு வரவிருக்கின்றமை சாதாரணமாகக் கடந்துபோகக்கூடிய நாளாந்தச் செய்தியல்ல. மிகப்பெரிய ஆபத்தை இந்தப் பயணம் இலங்கைக்கு உண்டுபண்ணக்கூடியது.

விடுதலைப் புலிகளின் ஆயுதங்கள் மௌனிக்கப்பட்ட பின்னர், இலங்கையில் பிராந்திய வல்லரசுகளான இந்தியா மற்றும் சீனாவின் கடல்சார் மற்றும் புவியியல் தலையீடுகள் நாளுக்குநாள் தீவிரமாகிக்கொண்டே வருகின்றன. இந்தியாவின் பக்கமாகச் சாய்வதா? சீனாவின் பக்கமாகச் சாய்வதா? என்ற தீர்மானத்தில் 'மீனுக்குத் தலையும், பாம்புக்கு வாலுமாக' பரிதவிக்கின்றது இலங்கை. இவ்வாறிருக்கையில், ஈரான், அமெரிக்கா போன்ற நாடுகளும் இந்தத் தீவில் செல்வாக்குச் செலுத்த ஆரம்பித்தால் இலங்கையின் எதிர்காலம் மீண்டெழ முடியாத இருண்ட பக்கங்களால் சூழப்படவே செய்யும். அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையிலான மோதல் என்பது தூதரக - இராஜதந்திர விவகாரம் அல்ல. இது முழுக்கமுழுக்க ஆயுதங்களை மையப்படுத்தியது. ஈரானுடன் புதுப்பிக்கத்தக்க சாத்தியங்கள் அல்லாமல் உறவை முறித்திருக்கின்றது அமெரிக்கா. சீனா - இந்தியா விவகாரம் போன்று ஈரான் - அமெரிக்கா விவகாரத்தை இலங்கை அணுக முடியாது அணுகவும் கூடாது. அமெரிக்கா என்னும் பிணம்தின்னிக்கழுகு இலங்கையை நோக்கி தன் கடைக்கண்ணைத் திருப்பினால் அதிலிருந்து மீண்டுவரும் திராணியும் பொருளாதாரப் பலமும் இலங்கையிடம் இப்போதைக்குக் கொஞ்சமும் இல்லை என்பது வெளிப்படை!




## ஊழல்களை மூடிமறைக்கும் தெற்காசிய நாடாக இலங்கை

### ஆய்வில் தகவல்

கொழும்பு, பெப். 20

**பொதுக் கொள்வனவுகளில் ஊழல் மற்றும் மோசடி நடவடிக்கைகளில் ஈடுபடுவோரை கறுப்புப் பட்டியலில் சேர்ப்பதற்கான சரியான காரணத்தை வெளிப்படுத்தாத நாடாக இலங்கை தெற்காசியா நாடுகளிடையே அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.**

'வெரிட்டி ரிசேர்ச்' நிறுவனம் மேற்கொண்ட ஆய்வறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடனைச் செலுத்தத் தவறிய ஒப்பந்தகாரர்களை கறுப்புப் பட்டியலில் சேர்ப்பது மட்டுமல்லாமல், அவர்களின் பெயர்களைப் பொது மற்றும் நிகழ்நிலை தரவுத்தளத்தில் வெளியிடவும் இலங்கையில் ஏற்பாடுகள் காணப்படுகின்றன.

எனினும்பொது நிதித்துறையால் நிர்வகிக்கப்படும் இந்தத் தரவுத் தளத்தில் கறுப்புப் பட்டியல் குறித்த எவ்விதத் தரவுகளும் பதிவிடப்பட்டிருக்கவில்லை.

எனவே 2024 ஆம் ஆண்டுக்குள் சிறந்த நடைமுறைகளை பிரதிபலிக்கும் பொதுக் கொள்முதல் சட்டத்தை இலங்கையில் இயற்றவேண்டும் என்றும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ச-இ)

## குழந்தை விற்பனை: தாயார் கைது!

பிறந்து 9 நாள்களேயான குழந்தையை விற்பனை செய்வதற்கு முயன்ற தாயார் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். மினுவாங்கொட பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

3 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாவுக்காக அந்தக் குழந்தையை அவர் பிறிதொரு தரப்பினருக்கு விற்பனை செய்வதற்கு முயன்றுள்ளார். புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவல்களையடுத்து அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட பெண் 28 வயதுடையவர் என்றும் அவரிடம் விசாரணைகள் இடம்பெற்றுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-26)

## பண்டிகைக் காலத்தில் விலைகளில் வீழ்ச்சி

எதிர்வரும் தமிழ் – சிங்களப் புத்தாண்டையொட்டி அத்தியாவசியப் பொருள்கள் பலவற்றின் விலைகள் சரிவடையும் என்று வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

டொலரின் பெறுமதி குறைவடைந்துள்ள நிலையில் அத்தியாவசியப் பொருள்கள் பலவற்றை இறக்குமதி செய்வதற்குத் தேவையான ஏற்பாடுகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் இறக்குமதி செய்யப்படும் பொருள்களின் விலைகள் குறைக்கப்படும்.

நேற்றுமுதல் லங்கா 'சதொச' நிறுவனத்துக்குத் தினமும் 10 இலட்சம் முட்டைகள் விநியோகிக்கப்படுகின்றன என்றும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (ச–இ)

## முதலாம் தவணை ஆரம்பம்

கொழும்பு, பெப். 20

அரச பாடசாலைகள் மற்றும் அரசினால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலைகளின் 2024ஆம் ஆண்டு கல்வி நடவடிக்கைகளுக்கான முதலாம் தவணை நேற்று திங்கட்கிழமை ஆரம்பமாகியுள்ளது.

பாடசாலைகளின் மூன்றாம் தவணை கடந்த 16ஆம் திகதியுடன் முடிவடைந்தது. 2023ஆம் ஆண்டுக்கான 3ஆம் தவணை விடுமுறை டிசெம்பர் 22ஆம் திகதி முதல் பெப்ரவரி 2ஆம் திகதி வரை வழங்கப்பட்டிருந்தது. கொரோனாத் தொற்றுக் காரணமாக மாற்றமடைந்த பாடசாலைத் தவணை முறைகளை, 2025ஆம் ஆண்டு முதல் சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (ச–இ)

## ஆசிய – பசுபிக் பிராந்திய விவசாய மாநாடு ஆரம்பம்

கொழும்பு, பெப். 20

ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் 37ஆவது ஆசிய – பசுபிக் பிராந்திய மாநாடு கொழும்பில் நேற்று ஆரம்பமாகியுள்ளது.

இந்த மாநாடு எதிர்வரும் 22 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இலங்கை உணவு விவசாய அமைப்பின் (FAO) பணிப்பாளர் நாயகம், கலாநிதி டொங்யூ மாநாட்டில் பங்கேற்பதற்காக 3 நாள் பயணத்தை மேற்கொண்டு இலங்கை வந்துள்ளார்.

மேலும் மாநாட்டில் 35 நாடுகளைச் சேர்ந்த விவசாய அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள், அதிகாரிகள் உட்பட 300க்கும் மேற்பட்டோர் கலந்துகொள்ளவுள்ளனர் என்று விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது. (ச–இ)

### நாளை

21.02.2024
**புதன்கிழமை**
**மாசி–09**
சுபநேரம் : 05.01 - 06.31
ராகுகாலம் : 12.31 - 02.01
பிரதோஷ விரதம்

### நாளொரு நல்வார்த்தை

**நிஜம் எப்போதும் நிர்வாணமாகத்தான் நிற்கும், பொய்தான் ஆடை போர்த்திக்கொள்ளும்.**
**– கவிஞர் வாலி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருபூஜையும் சொற்பொழிவும்

யாழ்ப்பாணம், பெப்.20

யாழ்ப்பாணம், சாவற்கட்டு, ஆனைக் கோட்டை அந்திக்குழி அருள்மிகு ஸ்ரீ ஞான வைரவர் காளி அம்பாள் தேவஸ் தானப் பிரதான மண்ட பத்தில் வாராந்த பெரியபுரா ணச் சிறப்புச் சொற்பொழிவு சிவ நெறிப் பிரகாசர் சம யஜோதி கதிர்கா மன் நிஜலிங்கம் ஒழுங்கமைப்பில் எதிர்வரும் 23 ஆம் திகதி வெள்ளிக் கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெற வுள்ளது.

சேக்கிழார் பெருமா னின் குருபூஜை யைத் தொடர்ந்து "தில்லைப் பெரு மான் கனவிலே தன் திருவடியையே முடியாகச் சூட்டியரு ளியநாயனார்" என் னும் விடயப்பொரு ளில் இளஞ் சைவப் புலவர் ச. நவநீத னின் சொற்பொழி வு இடம்பெற்று அதிலிருந்து மாண வர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்களும் வழங்கப்படவுள் ளன. (ப)


# வேலைவாய்ப்பு

வட மாகாணத்தில் கட்டுமானத்துறையில் ஈடுபடும் எமது நிறுவனத்தில் பின்வரும் வெற்றிடங்கள் உள்ளன. ஆர்வம் உள்ளவர்கள் உடனடியாக தொடர்புகொள்ளவும்.

1. வெல்டர், தச்சு வேலை செய்பவர்
2. மேசன் / கூலியாட்கள்

தொடர்புகளுக்கு:-
இல.09, நந்தாவில் வீதி, தாவடி, யாழ்ப்பாணம்.
0777 120 945
Email : vacancynsc@gmail.com

(CS 27970) A-1


# கண்ணீர் அஞ்சலி

யாழ் வணிகர் கழகத்தின் அங்கத்தவரும், நியூ ராகம்ஸ் பட்டுச்சோலை உரிமையாளருமாகிய

## சண்முகதாஸ் தர்மதாஸ்

அவர்களின் மறைவைக் கேள்வியுற்று துயரடைகின்றோம்.
அவரின் இழப்பால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்திற்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**யாழ் வணிகர் கழகம்**
**இல.165, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.**

(cr.41851) (N.1)


# எஸ்ஓஎஸ் சிறுவர் கிராமம் - யாழ்ப்பாணம்

எஸ்ஓஎஸ் சிறுவர் கிராமங்களானது பெற்றோர்களை இழந்த, கைவிடப்பட்ட சிறுவர்களுக்கு பூரண பராமரிப்பை 137 சர்வதேச நாடுகளில் 74 வருடங்களாகவும் இலங்கையில் 44 வருடங்களாகவும் வழங்கி வருகின்ற அரச, மத சார்பற்ற நிறுவனமாகும். இந்நிறுவனத்தில் பின்வரும் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பதவி வெற்றிடங்கள்**

1. **FSP இணைப்பாளர்** (Coordinator- Family Strengthening Programme)
(ஆண் - 40 வயதிற்கு உட்பட்டோர்)
   - அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் சமூகவியல் பட்டம் (Degree) அல்லது (Diploma) கற்கை நெறிச்சான்றிதழினை கொண்டிருப்பதுடன் குறைந்தது ஒரு வருட / ஆறு மாத தொழில் சார் அனுபவத்தினைக் கொண்டிருப்பது மேலதிக தகைமையாகக் கருதப்படும்.
   - சமூகம் சார் வெளிக்கள வேலைகளில் ஆர்வமும் ஊக்கமும் உள்ளவராகவும் சாரதி அனுமதிப்பத்திரத்தினையும் கொண்டிருப்பதுடன் கணினி அறிவு மற்றும் மின்னஞ்சல் வாயிலாக அறிக்கையிடும் ஆற்றல் கொண்டவராக இருப்பதோடு, ஆங்கில மற்றும் சிங்கள மொழியறிவு கொண்டிருப்பது விரும்பத்தக்கது.
2. **முன் பள்ளி ஆசிரியை** (Kindergarten Teacher)
அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் ஆகக்குறைந்தது முன்பள்ளிக்கற்கை நெறியில் Diploma சான்றிதழ் ஒன்றினைக் கொண்டிருப்பதோடு முன் அனுபவம் இருத்தல் விரும்பத்தக்கது
3. **சிறுவர் பராமரிப்பு உத்தியோகத்தர்** (Care Taker) - பெண்
குடும்ப பொறுப்புகளற்ற, பிள்ளைகளுடன் தங்கியிருந்து பணியாற்றக்கூடிய 26 - 45 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்
4. **பயிற்றுவிப்பாளர்** (Instructor – Child Care Giver **சிறுவர் பராமரிப்பு கற்கை நெறி**)
   - அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் / தொழிற்கல்வி நிறுவனம் ஒன்றில் பட்டதாரி / துறைசார் தகைமை NVQ Level (IV) யினை / அதற்கு மேலதிகமான தகைமையினை கொண்டிருத்தல் அவசியம்.
   - TVET தரநிலைகளில் பரிச்சயமானதோடு அத்துறை சார்ந்த அனைத்து தகைமைகளையும் கொண்டிருப்பதோடு கற்பித்தல் ஆற்றல் மற்றும் குறைந்தது 03 வருட முன் அனுபவத்தையும் கொண்டிருத்தல் அவசியம்.
   - கணினி மற்றும் ஆங்கிலமொழியறிவினை கொண்டிருத்தல் கூடுதல் தகைமையாக கருதப்படும்.

இந்நிறுவனத்தில் சேவையாற்ற விரும்புவோர் தாங்கள் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிட்டு விண்ணப்பங்களை (தொலைபேசி இலக்கத்துடன்) **29.02.2024** இற்கு முன்னர் கீழ்க்குறிப்பிடப் பட்டுள்ள காரியாலய முகவரிக்கோ அல்லது மின்னஞ்சல் மூலமோ கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்கவும். இப்பதவிகள் நிரந்தரமானதும் ஊழியர் சேமலாப நிதி, நம்பிக்கை நிதியைக் கொண்டதுமாகும்.

சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.
நேர்முகத்தேர்விற்கான அழைப்பு தொலைபேசி மூலம் அறியத்தரப்படும்.

*"SOS Children's Villages Sri Lanka is committed to promote and protect the children's rights and therefore, it is expected that every individual expected to join SOS Children's Villages Sri Lanka understand his/her responsibilities in protecting and keeping children always safe. The highest standards of selection, recruitment and verification procedures will be applied for all employment opportunities with our organization including thorough cross-checking of references."*

தொடர்புகளுக்கு:


எஸ்ஓஎஸ் சிறுவர் கிராமம்,
இல:219, நாயன்மார்கட்டு,
நல்லூர், யாழ்ப்பாணம்.

தொ.பே: 021-221-1101
077-373-3711
மின்னஞ்சல்: jaffna@soscvsrilanka.org

(CR 54041) A-1


# மரண அறிவித்தல்

தோற்றம் 20 . 06 . 1948



மறைவு 18 . 02 . 2024

## சுப்பிரமணியம் தவலிங்கம்

கொக்குவில் மேற்கை பிறப்பிடமாகவும், டச் வீதி, உடுவில் மேற்கு சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் தவலிங்கம் 18.02.2024 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம்-செல்லம்மா தம்பதியினரின் அன்பு மகனும் தம்பிராசா-நாகரத்தினம் தம்பதியினரின் பாசமிகு மருமகனும் காலஞ்சென்ற புஷ்பகாந்தியின் அன்புக் கணவரும், பிரியா (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர், பிரதேச செயலகம் சங்கானை), நிருண் (நிரு மோட்டோர்ஸ்-இணுவில்), ஆகியோரின் பாசமிகு தந்தையும், தர்சன் (தேவா கராஜ் உடுவில்), டர்சிகா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், தருணிகா, அக்ஷயா, அட்சரன் ஆகியோரின் அன்புப் பேரனும், மல்லிகாதேவி, மணிமேகலை, இரத்தினம் (பஞ்சு), புஸ்பவதி (குணம்), சறோஜினிதேவி (சாந்தம்), சிவலிங்கம், கலாரஞ்சினி (கலா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 19.02.2024 பி.ப 1.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மகன் : 077 918 4500
மருமகன் : 077 764 0588

தகவல்:
**குடும்பத்தினர்.**

(CS 27969) V-1

# மரண அறிவித்தல்

பிறப்பு 07 . 02 . 1934



இறப்பு 19 . 02 . 2024

## ஆறுமுகம் சின்னப்பிள்ளை

கைதடி கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் சின்னப்பிள்ளை நேற்று (19.02.2024) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இளையதம்பி-தங்கமுத்து தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சடையர்-சடைப்பிள்ளையின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற ஆறுமுகம் (விக்கினேஸ்வரா ஸ்ரோர்ஸ் உரிமையாளர்) அவர்களின் அன்பு மனைவியும் மகாலட்சுமி, புஸ்பமலர், விக்கினேஸ்வரராஜா (சுவிஸ்), ஆகியோரின் அன்புத் தாயாரும், நாகராசா, இரத்தினசிங்கம், சிவஜெயந்தினி ஆகியோரின் அன்பு மாமியாரும், பகீரதன்-யசோதரா (கனடா), சுதர்ஜினி தவலிங்கம் (ஜேர்மனி), துவாகரன் (இலங்கை மின்சாரசபை சாவகச்சேரி) சாந்தினி (பிரதேச செயலகம்) சாவகச்சேரி), பார்த்தீபன் மஜிந்தா (பிரான்ஸ்), ரஜிவன் பமிலா (பெல்ஜியம்), நிஷாந்தன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், தஸ்மின், தஸ்மி, விந்தியா, திசான், திருஷாந், கனிஷ்கா, ஆதிஸ், அபிநந்தனா, வர்ஷனா, ஆகியோரின் பூட்டியும், காலஞ்சென்றவர்களான இராசம்மா, கமலாட்சி மற்றும் கதிர்காம்பிகை, விஸ்வநாதர் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான சிவகுரு, சங்கரப்பிள்ளை, சோமசுந்தரம் மற்றும் புவனேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (20.02.2024) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக ஊற்றல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கைதடி கிழக்கு,
கைதடி.

தகவல்:
**குடும்பத்தினர்.**

CR (41850) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விலைக்கேள்விக்கான கோரல் 2024 (கட்டம் I)
# வலி தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்

1. வலி தெற்கு பிரதேச சபை சார்பாக உள்ளூர் அதிகார சபை பெறுகைக்குழுவின் தலைவர் கீழ் வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைக்கான தகவுடையோரும் தகைமை பெற்றவருமான விலைக்கேள்வியாளர்களிடமிருந்து மூடப்பட்ட கடித உறையில் விலைக்கேள்விகளைக் கோருகின்றார்கள்.
2. விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வி நடைமுறையின் மூலம் நடாத்தப்படும்.
3. விலைக்கேள்வியாளர்கள், நிர்மாணத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (**CIDA**) பதிவு பெற்ற கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தினை பதிவு செய்யப்பட்டிருப்பதுடன் கறுப்புப் பட்டியலில் பெயர் இடம் பெறாதவராயிருத்தலும் வேண்டும்.
4. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது மற்றும் மேலதிக தகவல்கள் விலைக்கேள்வி ஆவணத்தில் **Schedule** (பகுதி 5) இல் உள்ளடக்கப்பட்டுள்ளன. (SBD -03)
5. அக்கறை கொண்டுள்ள விலைக்கேள்வியாளர்கள் கீழே **6ல் குறிப்பிடப்பட்ட முகவரியில்** மேலதிக தகவலைப் பெறலாம் என்பதுடன் அம் முகவரியில் மு.ப **9.00** மணியிலிருந்து பி.ப **3.00** மணிவரை அலுவலக நாட்களில் விலைக்கேள்வி ஆவணங்களைப் பரிசீலனை செய்யலாம்.
6. அக்கறை கொண்டுள்ள விலைக்கேள்வியாளர் ஆங்கில மொழியிலான விலைக்கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை **செயலாளர், வலி தெற்கு பிரதேச சபை, சுன்னாகம் (தொலைபேசி இல: 021-2240017, தொலைநகல் 021-2240327) எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை 2024.02.20 – 2024.03.04 காலப்பகுதியில் மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 3.00 மணிவரையில் சமர்ப்பித்து ரூ. 3,500.00** மீளளிக்கப்படாத தொகையினை பணமாகச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
7. விலைக்கேள்விகள் (மூலம், பிரதி) **2024.03.05 ஆம்** திகதி 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் **தலைவர், உள்ளூர் அதிகார சபை பெறுகைக்குழு, வலி தெற்கு பிரதேச சபை, சுன்னாகம் எனும் முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ ஒப்படைத்தல் வேண்டும்**. காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலைக்கான கேள்வி அடையாள இலக்கத்தினை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். விலைக்கேள்விகள், அவைகளை மூடியவுடன் மேலேயுள்ள முகவரியில் சமுகமளித்திருக்கும் விலைக்கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது முன்னிலையில் திறக்கப்படும்.
8. விலைக்கேள்விக்கு முன்னரான கூட்டம் மேலே 6 இல் குறிப்பிடப்பட்ட முகவரியில் **மு.ப 10.30** மணிக்கு 2024.02.27 அன்று நடைபெறும்
9. கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணைப்பொறுப்பு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| இல | கேள்வி அடையாள இல | வேலைவிபரம் | அண்ணளவான மதிப்பீட்டுத் தொகை (ரூ. மில்லியன்) | ஒப்பந்த காலம் (நாட்கள்) | தேவையான தரம் | கேள்வி சமர்ப்பிக்கப்படும் திகதியிலிருந்து கேள்வி செல்லுபடியாகும் | | கேள்விப் பிணைவிபரம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | காலம் (நாட்கள்) | திகதி | தொகை (ரு) | தேவைப்படும் காலம் |
| 01. | NP/14/41(15) /02/05/CF/2024/01 | **தொகுதி A**<br>1. அண்ணா பண்ணைக்கு அருகாமையில் (புதிய வீதி) வீதி புனரமைப்பு<br>2. சங்குவேலி தெற்கு காளிகோவில் முன்வீதி (உப ஒழுங்கை) | 2.90 | 87 | C7 and C8 (வீதிகள்) | 63 | 07.05.2024 | 30,000.00 | 04.06.2024 வரை |
| 02. | NP/14/41(15) /02/05/CF/2024/02 | **தொகுதி B**<br>1. சிவபூதராயர் குறுக்கு வீதி<br>2. சபாபதிப்பிள்ளை வீதி (வைரவர் கோவில் வீதி கிளை ஒழுங்கைகள் திருத்தம்) | 2.06 | 87 | C7 and C8 (வீதிகள்) | 63 | 07.05.2024 | 21,000.00 | 04.06.2024 வரை |
| 03. | NP/14/41(15) /02/05/CF/2024/03 | மகளிர் கல்லூரி கிழக்கு வீதி புனரமைப்பு – உடுவில் | 2.40 | 87 | C7 and C8 (வீதிகள்) | 63 | 07.05.2024 | 25,000.00 | 04.06.2024 வரை |
| 04. | NP/14/41(15) /02/05/CF/2024/04 | ஜனசக்தி சனசமூகநிலைய வீதி திருத்தம் | 2.14 | 87 | C7 and C8 (வீதிகள்) | 63 | 07.05.2024 | 22,000.00 | 04.06.2024 வரை |
| 05. | NP/14/41(15) /02/05/CF/2024/05 | அம்பலவாணர் வீதி புனரமைத்தல் (மிகுதி வேலை) | 3.21 | 87 | C7 and C8 (வீதிகள்) | 63 | 07.05.2024 | 33,000.00 | 04.06.2024 வரை |
| 06. | NP/14/41(15) /02/05/CF/2024/06 | சுன்னாகம் அலுவலகத்தினுடைய மலசலகூடத் திருத்தம் (Drain) | 0.31 | 60 | C8 and C9 (கட்டடங்கள்) | 49 | 23.04.2024 | 4,000.00 | 21.05.2024 வரை |
| 07. | NP/14/41(15) /02/05/CF/2024/07 | **தொகுதி C**<br>1. உழவர் வீதியிலுள்ள 1ம் 2ம் குறுக்கு ஒழுங்கை புனரமைப்பு<br>2. வன்னியசிங்கம் வீதியின் கிளைவீதி புனரமைப்பு | 2.92 | 87 | C7 and C8 (வீதிகள்) | 63 | 07.05.2024 | 30,000.00 | 04.06.2024 வரை |
| 08. | NP/14/41(15) /02/05/CF/2024/08 | **தொகுதி D**<br>1. உயிலடி 4ஆம் குறுக்கு வீதி<br>2. சுன்னாகம் புத்தூர் வீதி புன்னாலைக் கட்டுவன் வடக்குப் பக்கம் 3ஆம் குறுக்கு வீதி 3ஆம் சந்தி அருகாமை சாந்தை வீதி<br>3. சிறிமுருகன் பாடசாலை அருகாமை வீதி | 2.45 | 87 | C7 and C8 (வீதிகள்) | 63 | 07.05.2024 | 25,000.00 | 04.06.2024 வரை |
| 09. | NP/14/41(15) /02/05/CF/2024/09 | மயிலங்காடு மல்லாகம் முதலாம் குறுக்கு வீதி | 2.53 | 87 | C7 and C8 (வீதிகள்) | 63 | 07.05.2024 | 26,000.00 | 04.06.2024 வரை |
| 10. | NP/14/41(15) /02/05/CF/2024/10 | **தொகுதி E**<br>1. உருளைக்கடவை வீதி (சுன்னாகம் புத் தூர் வீதி புன்னாலைக்கட்டுவன் முதலாம் குறுக்கு வீதியின் தெற்குப் பக்கம்)<br>2. மில் வீதியின் உப வீதி புனரமைப்பு | 2.48 | 87 | C7 and C8 (வீதிகள்) | 63 | 07.05.2024 | 25,000.00 | 04.06.2024 வரை |
| 11. | NP/14/41(15) /02/05/CF/2024/11 | **தொகுதி F**<br>1. ஏழாலை மத்தி காளிகோயில் வீதி உப ஒழுங்கை<br>2. ஞானப்பிரகாசர் அளவாவோடை 5வது, 6வது குறுக்கு வீதி (கேசாவத்தை வீதி) | 2.37 | 87 | C7 and C8 (வீதிகள்) | 63 | 07.05.2024 | 24,000.00 | 04.06.2024 வரை |
| 12. | NP/14/41(15) /02/05/CF/2024/12 | **தொகுதி G**<br>1. சுன்னாகம் புத்தூர் வீதி மெதடிஸ் ஆலயத்திற்கு மேற்குப் பக்கமாகவுள்ள வீதி<br>2. இசிதோர் வீதியின் கிளை வீதி | 2.37 | 87 | C7 and C8 (வீதிகள்) | 63 | 07.05.2024 | 24,000.00 | 04.06.2024 வரை |
| 13. | NP/14/41(15) /02/05/CF/2024/13 | **தொகுதி H**<br>1. சபாபதி வீதி - ரான்ஸ்போமர் வீதி இணைப்பு வீதி<br>2. கருணாகரபிள்ளையார் கோயில் வீதி மிகுதிவேலை | 4.09 | 87 | C7 and C8 (வீதிகள்) | 63 | 07.05.2024 | 24,000.00 | 04.06.2024 வரை |
| 14. | NP/14/41(15) /02/05/CF/ 2024/14 | **தொகுதி I**<br>1. மருதனார்மடம் சந்தையினுடைய கூரைத் திருத்தம் (நீடித்தமைத்தல்)<br>2. மல்வம் சந்தைப் புனரமைப்பு | 1.59 | 60 | C8 and C9 (கட்டடங்கள்) | 49 | 23.04.2024 | 4,000.00 | 21.05.2024 வரை |

**"விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடாத்தப்படும். இக் கொள்வனவின் மூலம் நடாத்தப்படும் வேலைக்கான மதிப்பீட்டுத்தொகை (VAT மற்றும் வேறுவரிகள்) 50மில்லியனினுள் இருப்பின், பிராந்திய முன்னுரிமைமற்றும் CIDA தர முன்னுரிமை என்பன பொதுநிதிச் சுற்றறிக்கை இல 04/2016(iii) மற்றும் பின்னூட்டல் இல் குறிப்பிடப்பட்டவாறு பின்பற்றப்படும். அத்துடன் இக்கேள்வியின் போது 09.10.2020 மற்றும் 11.01.2021 ஆம் திகதிய பொதுநிதிச் சுற்றறிக்கை இல முறையே 03/2020 மற்றும் 03/2020(i) என்பனவும் பின்பற்றப்படும்."**

**தலைவர்**
**உள்ளூர் அதிகார சபை பெறுகைக்குழு,**
**வலி தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்.**
**20.02.2024**

(CR 41849) A-1

## கீரை மலிவு

யாழ்., பெப். 20
நீர்வேலி, கோப்பாய்ப் பிரதேசங்களில் கீரைச் செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
அங்கிருந்து கூடுதலான கீரைகள் அறுவடை செய்யப்பட்டு சந்தைக்கு வருவதால் அவற்றின் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என்று விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.
கீரை ஒரு பிடி 60 ரூபா முதல் 80 ரூபா வரையில் தற்போது விற்பனை செய்யப்படுகின்றது.
சீரற்ற காலநிலையால்கீரைச்செய்கை நீரில் மூழ்கி அழிவடைந்தமையால் கடந்த வாரம் ஒரு பிடிகீரை 150 ரூபா வரையில் விற்பனை செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச–17)

## சொற்பொழிவு

யாழ்., பெப். 20
யாழ்ப்பாணம், நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தில் நடத்தும் வாராந்தச் சிறப்புச் சொற்பொழிவு ஆலய சண்முக விலாசா மண்டபத்தில் சிவநெறிப் பிரகாசர், சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் ஒழுங்கமைப்பில் எதிர்வரும் 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு இடம்பெறவுள்ளது.
நிகழ்வில் தேவஸ்தான பிரதம குருக்கள் சிவஸ்ரீ இராஜேந்திர சுவாமிநாதக்குருக்களின் ஆசியுரையும் 'நாம மகிமை' என்னும் விடயப்பொருளில் சைவப்புலவர் பொன். சந்திரவேலின் சிறப்புச் சொற்பொழிவு இடம்பெற்று அதிலிருந்து அறநெறிப் பாடசாலை மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப்பாராட்டுப் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்தாம் ஆண்டு நினைவலைகள்



மண்ணில் 02.03.1952 — விண்ணில் 20.02.2014

**அமரர் செல்லையா இராசரத்தினம்**

(நியூலக்கி ஹாட்வெயர் உரிமையாளர், பிரபல கட்டட ஒப்பந்தக்காரர் )

பத்தாண்டு மறைந்து விட்டது அப்பா!
அகலுமா உங்கள் பிரிவின் சோகம்
மறையுமா உங்கள் நினைவின் பாசம்
எங்களை நிர்க்கதியாய் அநாதையாய்ப் பரிதவிக்க
விட்டு விட்டு எங்கு சென்றீர்கள்.
காலங்கள் ஆயிரம் போனாலும்
மறக்கமுடியுமா உங்கள் நினைவுகளை
எங்கள் உயிர் உள்ளவரை உங்கள்
நினைவுகள் தொடரும்.
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

(CS27960) J-1

343, கண்டி வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

**குடும்பத்தினர்**

# அறுவடை வாகனங்களால் போக்குவரத்தில் இடையூறு

யாழ்ப்பாணம், பெப். 20

வயல்களில் அறுவடைப் பணியில் ஈடுபடும் வாகனங்கள் வீதியால் செல்லும்போது களி மண்ணைச் சிந்திச் செல்வதால் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுகிறது என்று மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

பருத்தித்துறையில் இவ்வாறு வீதியில் களிமண் சிந்தப்படுவதால் வாகனங்களில் பயணிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

கோப்பாய்ப் பகுதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவர், வீதியில் சிந்தப்பட்ட வயல் மண்ணில் சறுக்கி அண்மையில் விபத்துக் குள்ளாகினார் என்றும் மக்கள் சுட்டிக்காட்டினர். (ச-17)

அரியாலை சனசமூக நிலையம் நடாத்தும்

**மாபெரும் Carnival**

**And Food Festival**

**JOYFUL JAMBOREE**

- February மாதம் 21ம், 22ம், 23ம், 24ம், 25ம் திகதிகளில்
  அரியாலை சனசமூக நிலைய மைதானம்
  (புங்கன்குளம் புகையிரத நிலையத்திற்கு அருகில்)
- நேரம் : மாலை 4.00 மணி முதல் 09.00மணி வரை
  10வயதிற்கு உட்பட்டவர்களுக்கு அனுமதி இலவசம்.
- February மாதம் 21ம், 22ம், 23ம், 24ம் திகதிகளில்
  S.J.ரஞ்சனின் DJ Mix
  நுழைவுச்சீட்டு ரூ.300.00
- February மாதம் 25ம் திகதி இறுதி நாள்
  இலங்கையின் புகழ்பெற்ற M.சிவகுமாரின்
  "அக்னி இசைக்குழுவினரின்"

"MEGA BLAST" இன்னிசை நிகழ்வு
நுழைவுச்சீட்டு ரூ.500.00

விதம் விதமான உணவுவகைகளும் உங்களுக்காக

* சிறுவர்களுக்கான விளையாட்டுக்கள்
* Jet
* சிறுவர்களுக்கான மின்சார கார்
* மயிர்கூச்செறியும் பாதாளக்கிணறு
* Merry go Round
* ராட்சத சுழல் சக்கரம்
* மின்சார Train

உணவகம் அமைக்க விரும்புபவர்கள் 076 395 4515 உடன் தொடர்புகொள்ளவும்
இன்னும் பல விளையாட்டுக்களுடன் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நிர்வாகம்

(cs 54016) (N-1)

## நிர்வாகத் தெரிவு

அச்சுவேலி தெற்கு, கலாநிதி சனசமூக நிலையத்தின் 2024 ஆம் ஆண்டுக்கான பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் நிலைய முன்றிலில் அண்மையில் நடைபெற்றன.

புதிய நிர்வாகசபையின் தலைவராக பி.நேருஜன், செயலாளராக க.தர்ஷன், பொருளாளராக த.மகிழ்ராஜ், உபதலைவராக க.கோபிநாத், உபசெயலாளராக க.திகழொளிபவன், உள்ளகக் கணக்காய்வாளராக ந.சாரங்கன் ஆகியோரும், நிர்வாக உறுப்பினர்களாக 6 பேரும், ஆலோசகர்சபை உறுப்பினர்களாக 9 பேரும் தெரிவு செய்யப்பட்டனர். (ப-66)

# மரண அறிவித்தல்



மண்ணில் 20.07.1943 — விண்ணில் 17.02.2024

## சிவஞானம் - ஐந்து ராசாத்தி

மணற்பகுதி புத்தூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவஞானம் ஐந்து ராசாத்தி அவர்கள் கடந்த (17.02.2024) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னவன் - குழந்தை தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான இளையதம்பி - ஆச்சிக்குட்டி தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற இளையதம்பி - சிவஞானத்தின் (JP) பாசமிகு மனைவியும், சேரலாதன் (கனடா), ஜெயகௌரி, உமா, வானதி, மஞ்சு ஆகியோரின் பாசமிகு தாயாரும், காமினி (கனடா), முருகதாசன் (யாழ். போதனா வைத்திய சாலை), மகேஸ்வரன், தங்கராஜா (யாழ். பல்கலைக்கழகம்), சதீஸ்குமார் (யாழ். போதனா வைத்தியசாலை) ஆகியோரின் பாசமிகு மாமி யாரும், காலஞ்சென்றவர்களான மாணிக்கம், பருவதம், அன்னலட்சுமி, அரியமலர் மற்றும் அருந்தவம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சச்சிதானந்தம், பஞ்சாட்சரம், பாலனேமி, தாசரதி, வரதாம்பிகை, பாமதாசன் மற்றும் காலஞ்சென்ற சரசாம்பிகை ஆகியோரின் மைத்துனியும், சியாமி (கனடா), நீதன் (கனடா), தனுஷன் (கிராம சேவகர் நல்லூர்), வினோஜன் (டென்மார்க்), விதுர்ஷா (டென்மார்க்), வித்தகன் (யாழ். பல்கலைக்கழகம்), சாகித்தியா (BCAS CAMPUS), காருண்யன் (லண்டன்), பகலவன் (ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம்), தூயவன் (யாழ். பல்கலைக்கழகம்), பிரசன்யா (ஆசிரியை), மலரவன் (யாழ் தொழில் நுட்பக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.02.2024) செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆவரங்கால் கவுடுது இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மணற்பகுதி,
புத்தூர்.

தகவல்:
**குடும்பத்தினர்.**
**077 919 5380**

(CS/31680) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பாதுகாப்பான எதிர்காலம் ஒன்றை ஏற்படுத்தவும், வாடிக்கையாளரான உங்களுக்கு ஆண்டுதோறும் மிகப்பெரிய முதலீட்டு வருமானத்தை வழங்கவும் நாங்கள் எப்போதும் முயற்சி செய்கிறோம். புதுமையான மற்றும் எதிர்கால மூலோபாயத் திட்டங்கள் மூலம் எங்கள் வாடிக்கையாளர்களின் நிதி நலனுக்காக வடிவமைக்கப்பட்ட சிறந்த காப்பீட்டுத் தீர்வுகளை வழங்குவதே எங்கள் இலட்சியம்.

மேலதிக தகவல்களுக்கு இன்றே உங்கள் காப்புறுதி ஆலோசகரை அல்லது 1330 ஐ அழைக்கவும்!

1330 இணைவதற்கு unionassurance.com

யூனியன் அஷ்யூரன்ஸ்
ஜோன் கீல்ஸ் நிறுவனமாகும்

# ஜனாதிபதித் தேர்தலை பிற்போட முடியாது!

## பீரிஸ் உறுதி



கொழும்பு, பெப். 20

ஜனாதிபதித் தேர்தலை பிற்போடுவதற்கு தற்போதைய ஜனாதிபதி எந்த விளையாட்டில் ஈடுபட்டாலும் அந்த முயற்சி கைகூடாது. எதிர்வரும் நவம்பர் 18 க்கு பிறகு ஜனாதிபதி ஆட்சியில் இருக்க முற்பட்டால் அது அரசமைப்பை அப்பட்டமாக மீறும் செயலாகவே அமையும் என்று சட்டத்துறைப் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதித் தேர்தலுக்கான அழைப்பை விடும் அதிகாரம் தேர்தல் ஆணைக்குழுவுக்கு உள்ளது. ஜுலை இறுதியில் அல்லது ஓகஸ்ட் முதல் வாரத்தில் இதற்கான அழைப்பு விடுக்கப்படவேண்டும். ஒருநாள் கூட இதனைத் தாமதிப்பதற்குத் தேர்தல் ஆணைக்குழுவுக்கு அதிகாரம் கிடையாது. எனவே, 2024 இல் குறித்தொதுக்கப்பட்ட நாளில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட்டாகவேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் தற்போதைய அரசு சட்டபூர்வமான அரசு என்ற தன்மையை இழந்துவிடும். அதாவது நவம்பர் 18 ஆம் திகதிக்கு பிறகு ஒரு மணிநேரம்கூட ஜனாதிபதி அந்தப்பதவியில் நீடிப்பதற்கு முற்பட்டால் அது சட்டவிரோதம். அரசமைப்பை மீறும் செயல்.

சட்டவிரோத அரசால் வரி வசூலிக்க முடியாது, படையினருக்குக் கட்டளைகளைப் பிறப்பிக்கமுடியாது. வெளிநாட்டுத் தூதுவர்கள், ஆளுநர்களை நியமிக்க முடியாது. சர்வதேச நாணய நிதியம் உட்பட சர்வதேச நிறுவனங்களுடன் கொடுக்கல் - வாங்கலில் ஈடுபடமுடியாது. நிதி இல்லை எனக்கூறிக்கூட ஜனாதிபதித் தேர்தலைப் பிற்போட முடியாது. எனவே ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் மக்கள் அச்சம் கொள்ளவேண்டியதில்லை. ஜனாதிபதித் தேர்தலை பிற்போட மனதுக்குள் வியூகம் வகுக்கப்பட்டாலும் அது நடைமுறைக்குச் சாத்தியமற்ற விடயமாகும் - என்றார். (ஒ-44)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணம், நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் தரம் ஒன்றில் இணைந்து கொண்ட மாணவர்களுக்கு பொன். சிவசுப்பிரமணியம் தனது நிதியில், வங்கியில் சேமிப்புக் கணக்குகளை ஆரம்பித்து கணக்குப் புத்தகங்களைக் கடந்த வெள்ளிக்கிழமை வழங்கினார். கல்லூரி அதிபர் ஸ்ரீமதி முருகசோதி தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் இங்கிலாந்தில் பணிபுரியும் சட்ட நிபுணர் பொன்.சிவசுப்பிரமணியம் பிரதம விருந்தினராகவும் கோப்பாய் இலங்கை வங்கியின் முகாமையாளர் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொண்டனர். (ப-159)

கல்வி, வாழ்வாதாரம் போன்ற உதவிகளைச் செய்துவரும் இஸ்லாமிய உதவிக் குழு அமைப்பின் (ஐ.எஸ்.ஆர்.சீ.) வட மாகாணத்துக்கான அலுவலகம் மன்னாரில் அண்மையில் திறக்கப்பட்டது. (எ-60)





தென்மராட்சிப் பிரதேச, கலாசார அதிகாரசபையின் பொதுக்கூட்டம் மற்றும் புதிய நிர்வாகிகள் தெரிவு என்பன தென்மராட்சிப் பிரதேச செயலக மண்டபத்தில் பிரதேச செயலர் திருமதி உஷா சுபலிங்கம் தலைமையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றன. (ப-9)



மன்னார் மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் மன்னார் மாவட்டச் செயலர் கே.கனகேஸ்வரன் ஏற்பாட்டில் நடப்பு வருடத்துக்கான மன்னார் மாவட்டத்தின் முதலாவது மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. (ப-56-60)

# யாழ்ப்பாணத்தில் தற்போது 33 பாதுகாப்பற்ற ரயில்கடவை

யாழ்ப்பாணம், பெப். 20

யாழ்ப்பாணத்தில் தற்போது 33 பாதுகாப்பற்ற ரயில் கடவைகள் உள்ள நிலையில், இன்னும் அது தொடர்பான அடுத்தகட்ட அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணிலின் தலைமையில் கடந்த ஜனவரிமாதம் யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் இடம்பெற்றது. இந்தக்கூட்டத்தின்போதே யாழ்ப்பாணத்தில் 33 பாதுகாப்பற்ற ரயில் கடவைகள் உள்ளன என்று சுட்டிக் காட்டப்பட்டிருந்தது. இதன்போது, இந்த வருடத்தில் அது தொடர்பில் கவனம் செலுத்தப்படும் என்று ஜனாதிபதி தெரிவித்திருந்தார். இலங்கை ரயில் திணைக்களத்திடம் இது தொடர்பான மதிப்பீட்டறிக்கைகளும் கோரப்பட்டிருந்தன. இந்த நிலையில், இது தொடர்பான அடுத்தகட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமையே யாழ்ப்பாணத்தில் அண்மைய நாள்களாக அதிகரித்துவரும் ரயில் விபத்துகளுக்கான பிரதான காரணம் என்று ஆர்வலர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். யாழ்ப்பாணத்திலுள்ள அத்தனை பாதுகாப்பற்ற ரயில் கடவைகளும் பாதுகாப்பானவையாக மாற்றப்படவேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர். (ம-125)



கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் ஆலய வளாகத்தில் அமைந்துள்ள குடைச்சுவாமிகளின் சமாதி ஆலயத்தில் ஈழத்துச் சித்தர் குடைச்சுவாமிகளின் வருடாந்த குருபூஜை நிகழ்வு கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. (ப-66)

## கேரளக் கஞ்சாவுடன் சந்தேகநபர் கைது!

சுன்னாகம், பெப்.20

2 கிலோ கேரளக் கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த சந்தேகநபர் ஒருவர் பொலிஸ் விசேட போதைப் பொருள் தடுப்புப் பிரிவினரால் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டு சுன்னாகம் பொலிஸாரிம் ஒப்படைக்கப்பட்டார்.

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட, சுன்னாகம் பகுதியிலுள்ள வீடொன்றில் இருந்தே குறித்த நபர் கைது செய்யப்பட்டு சுன்னாகம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

மேலும் சுன்னாகம் பொலிஸார், குறித்த நபரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்துள்ளனர். (ப-27)

## மரதன் ஓட்டம்

முல்லை., பெப்.20

முல்லைத்தீவு, முள்ளியவளை கலைமகள் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியை முன்னிட்டு பாடசாலை நிர்வாகத்தால் ஒழுங்கமைக்கப்பட்ட மரதன் ஓட்ட நிகழ்வு எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதி இடம்பெறவுள்ளது. (ப-13)

## கீரிமலைப் பகுதியில் நாய்களின் தொல்லை

### பொதுமக்கள் விசனம்

யாழ்ப்பாணம், பெப். 20

கட்டாக்காலி நாய்களின் பெருக்கத்தால் கீரிமலை புனித தீர்த்தக்கரை வளாகத்தில், பெரும் சிரமத்துக்கு மத்தியில் ஈமக்கிரியைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளதாக பொதுமக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

உயிர்நீத்த உறவுகளுக்கான ஈமக்கிரியைகளை ஆத்மார்த்தமான முறையில் மேற்கொள்வதற்காக தெருநாய்களை அங்கிருந்து அகற்றி ஒத்துழைப்புத் தர வேண்டும் என்று வலி.வடக்குப் பிரதேச சபையிடம் மக்கள் வேண்டுகோளை முன்வைத்துள்ளனர்.

அத்துடன், ஈமக்கிரியைகளின் கழிவுகள் கடற்கரையில் திரண்டுள்ள நிலையில் கிரியைகளை மேற்கொள்ள கடற்கரையினுள் இறங்கி தமது பிதிர்கடன்களைச் செலுத்த முனைவோர் சிரமத்தை எதிர்கொள்ளவேண்டியுள்ளதாகவும் மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ம-125)

## அழிவடைந்த கட்டடங்களை அகற்றுமாறு கோரிக்கை

முல்லைத்தீவு, பெப்.20

முல்லைத்தீவு - மாங்குளம் நகரத்தில் போரால் அழிவடைந்த கட்டடங்களை அகற்றுவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மாங்குளம் நகரம் 1990ஆம் ஆண்டுதொடக்கம்போர்க்காலத்தில் பெரும் அழிவுகளை எதிர்கொண்டு வந்த நிலையில் 2010ஆம் ஆண்டுக்குப் பின்னரே அந்த நகரத்தில் மக்கள் மீளக் குடியமர்ந்தனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் முக்கியமான நகரங்களில் ஒன்றாக மாங்குளம் விளங்குகின்றபோதிலும் அங்கு கூடுதலான அபிவிருத்தித் திட்டங்கள் இடம்பெறவில்லை எனவும் போரினால் அழிவடைந்த கட்டடங்கள் அகற்றப்படாமல் விலங்குகளின் உறைவிடமாகக் காணப்படுகின்றன எனவும் பொது அமைப்புகள் சுட்டிக்காட்டியுள்ளன. (ப-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை முழுதும் பொலிஸ் இராஜ்ஜியம்?

### ஜி.எல்.பீரிஸ்க்குச் சந்தேகம்

ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்க முடியாது என்பதால் நாட்டை பொலிஸ் இராஜ்ஜியமாக்குவதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன என்று சட்டத்துறைப் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கிளர்ச்சியை ஒடுக்குவதற்கான முகக்கவசம், ரபர் பெட்டன்கள் உள்ளிட்டவற்றை கொள்வனவு செய்வதற்காக பொலிஸ் தலைமையகம் விலைமனு கோரியுள்ளது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்க எல்லா வித முயற்சிகளும் எடுக்கப்பட்டன. அவை கைகூடவில்லை. இறுதி அஸ்திரமும் புஸ்வாணமானது.

ஆனால் கண்ணீர்ப்புகை, நீர்த்தாரைப் பிரயோகம், பெட்டன் பொல் தாக்குதல் என்பவற்றின் ஊடாக மக்களை அச்சுறுத்துவதற்கு முற்படலாம். புதிய பயங்கரவாதத் தடைச்சட்டம், ஒலி - ஒளிபரப்பு ஆணைக்குழுச் சட்டம் என எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டால் பொலிஸ் இராஜ்ஜியத்தைக் கட்டியெழுப்புவதற்கான ஏற்பாடுகளே இடம்பெறுகின்றன.

பொலிஸ் இராஜ்ஜியத்தை ஏற்படுத்தி அவ்வாறானதொரு சூழ்நிலையில் தேர்தல் நடத்த முற்படலாம். அதற்கு நாம் இடமளிக்கப்போவதில்லை. மக்கள் மற்றும் ஜனநாயக நாடுகள் ஏற்கும் வகையில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட்டாகவேண்டும். இந்தத்தேர்தலின் பின்னர் அரசமைப்பு மறுசீரமைப்பு மேற்கொள்ளலாம் - என்றார். (அ-ஒ-44)

## பெண் அதிபர் நியமனம்: மத்திக்கு வரப்பிரசாதமே

### பழைய மாணவர் சங்கத் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 20

நிரந்தர அதிபர் இல்லாத குறை நீக்கப்பட்டு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் 15 வருடங்கள் அனுபவம்மிக்க ஒரு பெண் ஆசிரியர் அதிபராக நியமிக்கப்பட்டமையை வரப்பிரசாதமாக நாங்கள் கருதுகின்றோம் என யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்கத் தலைவர் கு. விக்னேஸ் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பெண் அதிபரை நியமிப்பதற்கு எதிராக எந்தவகையிலும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாத காரணங்கள் கூறப்படுகின்றன. தங்களின் சுயநலத் தேவைகளுக்காகவும், பிழையான வழிநடத்தல்களுடனும் நடத்தப்பட்ட போராட்டமாகவே அதைப் பார்க்கின்றோம். குறித்த போராட்டம் தனிப்பட்ட ஒரு சிலரின் நடவடிக்கையே தவிர ஒட்டுமொத்த பாடசாலைச் சமூகத்தையும் சாராது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் மிகத் தெளிவாகக் குறிப்பிட விரும்புகின்றேன் - என்றார். (அ-ஒ-66)

## அகழ்வில் சிக்காத தங்கம்

தமிழீழ விடுதலைப் புலிகளால் புதைக்கப்பட்ட தங்கம் இருப்பதாக கிடைத்த தகவலுக்கு அமைவாக பொலிஸார் நீதிமன்றின் அனுமதியுடன் நேற்றைய தினம் கிளிநொச்சி, குமாரசாமிபுரம் தனியார் காணியிலுள்ள வீடொன்றில் 3 அடிக்கு அகழ்வுப்பணி இடம்பெற்றது. ஆனால் அங்கு தங்கம் எதுவும் மீட்கப்படவில்லை. இன்றைய தினமும் மீண்டும் தோண்டும் பணி இடம்பெறவுள்ளது. (ஒ-113)

## நூதன திருட்டு முயற்சி; மூதாட்டியால் முறியடிப்பு

பளை, பெப். 20

வர்த்தகரான மூதாட்டி ஒருவரை ஏமாற்றி 12 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களை அபகரிக்க முயன்ற மூவர் அவரின் சாதுரியத்தால் பொருள்களைக் கைவிட்டுச் சென்றனர். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் பளை நகர்ப்பகுதியில் இடம்பெற்றது.

பளை நகரக் கடைத்தொகுதிகளில் மூதாட்டி வர்த்தக நிலையத்தை நடத்தி வருகிறார். வர்த்தக நிலையத்துக்கு நேற்று வந்த மூவர் கடையினுள் உள் நுழைந்து அங்கிருந்து பால்மா வகைகள் உட்பட பல பொருள்களை எடுத்து பையொன்றில் வைத்துக்கட்டினர்.

வர்த்தக நிலையத்தின் மறுபக்கத்தில் வீதியோரத்தில் நிற்கும் ஓட்டோவில் அவற்றை வைத்து விட்டு வந்து பணத்தை தருவதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். ஆனால் மூதாட்டி அதற்கு சம்மதிக்கவில்லை. இதற்கிடையில் மூதாட்டியின் மகன் அங்கு வந்துள்ளார். அவரும் பணத்தைச் செலுத்திவிட்டு பொருள்களைக் கொண்டு செல்லுமாறு கூறியுள்ளார். ஆனால், பொருள்களை எடுத்தவர்கள் அதற்கும் சம்மதிக்காத நிலையில், பொலிஸாருக்கு அழைப்பு எடுக்குமாறு மூதாட்டி கூறவே, மூவரும் பொருள்களைக் கைவிட்டு மோட்டார்சைக்கிளில் தப்பிச் சென்றுள்ளனர். (அ-ஒ-9)

### வடக்கு...

இந்தியாவின் நிதி உதவியுடன் மலையகத்தில் முன்னெடுக்கப்படவுள்ள 10 ஆயிரம் வீட்டுத் திட்டத்தில் முதற்கட்டமாக ஆயிரத்து 300 வீடுகளுக்கு அடிக்கல் நடும் விழாவின் பிரதான நிகழ்வு ஜனாதிபதி செயலகத்தில் நேற்று நடைபெற்றது. இந்நிகழ்வுக்குத் தலைமைதாங்கி உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

"பொருளாதாரத்தை மேம்படுத்தி முன்னோக்கிச் செல்லும் போதும் பிரச்சினைகள் இருக்கின்றன. வரி அதிகரிக்கப்பட்ட பிரச்சினை இருக்கிறது. இந்தப் பிரச்சினை நீண்ட காலத்துக்கு இருக்காது. சிறிதுகாலம் செல்லும்போது வரிச் சுமை குறையும். இந்தியாவால் வழங்கப்பட்ட உதவிகளின் மூலம் இந்தக் காலத்தில் முன்னோக்கிப் பயணிக்க முடிந்தது. இந்த உதவிகள் கிடைத்திருக்காவிட்டால், எம்மால் முன்னோக்கிப் பயணித்திருக்க முடியாது. நாம் இந்தியாவுடன் இருக்கும் பொருளாதார உறவுகளை மேலும் வலுப்படுத்திக்கொள்ள பணியாற்றி வருகிறோம். அனைத்து நாடுகளும் தமது எல்லைகளுக்குள் பொருளாதாரத்தையும், சமூகத்தையும் மேம்படுத்திக் கொள்ளவே முயற்சித்தன. இந்த நிலை மாறியுள்ளது. விசேடமாக இந்தியாவின் பொருளாதாரம் வேகமாக வளர்ந்து வரும் சந்தர்ப்பத்தில், நாமும் இதிலிருந்து பயன்பெறவேண்டும்" என்றார் ஜனாதிபதி ரணில். (அ-ஒ-44)

### 1,558 காணிகள்...

மக்களால் ஈடு வைக்கப்பட்டுள்ளன. யாழ். மாவட்டச் செயலகத்தில் உள்ள காணிப் பதிவாளர் அலுவலகத்திடம் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாகப் பெறப்பட்ட தகவலிலிருந்து இது தெரியவந்துள்ளது.

வங்கிகளில் 647 காணிகளும், தனியாரிடம் 911 காணிகளுமாக ஆயிரத்து 558 காணிகள் ஈடுவைக்கப்பட்டுள்ளன.

பொருளாதார நெருக்கடி காரணமாக மக்கள் தங்கள் சொத்து களை விற்பனை செய்யும் நிலைமை தொடர்வதாகச் சுட்டிக்காட்டப்படும் நிலையிலேயே கடந்த ஆண்டு மாத்திரம் ஆயிரத்து 558 காணிகள் யாழ். மாவட்டத்தில் மாத்திரம் ஈடுவைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை - கடந்த ஆண்டு காணிப் பதிவாளர் திணைக்களத்தில் காணிகள் மற்றும் ஆவணங்களாக 27 ஆயிரத்து 58 பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (அ-ஒ-125)

### சிறுமி...

15 வயதுச் சிறுமியை 4 நாள்களாகக் கடத்தி வைத்திருந்த குற்றச்சாட்டில் 17 வயதுச் சிறுவனை நேற்றுமுன்தினம் கைது செய்துள்ளதாக வட்டுக்கோட்டைப் பொலிஸார் தெரிவித்தனர்.

வட்டுக்கோட்டைப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தொல்புரம் பகுதியில் 15 வயதுச் சிறுமியைக் காணவில்லை என்று அவரது மூத்த சகோதரியால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அதற்கு அமைவாக விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், அதேயிடத்தைச் சேர்ந்த 17 வயதுச் சிறுவனின் வீட்டிலிருந்து சிறுமியை மீட்டனர். யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் மருத்துவப் பரிசோதனைக்காகச் சிறுமியைச் சேர்த்த பொலிஸார், சிறுவனைக் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தியுள்ளனர்.

நேற்றுமுன்தினமும் 15 வயதான சிறுமியொருவரைக் கடத்தினார் என்ற குற்றச்சாட்டில் 22 வயதான இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-125)

### பெண்...

கடந்த பாரம்பரியமிக்க ஒரு ஆண்கள் பாடசாலையில் முதல்முறையாக பெண் அதிபரை நியமிப்பதற்கு ஆட்சேபனை செய்கின்றோம்' என போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். கல்லூரியின் பதில் அதிபராகச் செயற்பட்ட எஸ்.இந்திரகுமாரை மீண்டும் அதிபராக நியமிக்குமாறும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தினார்கள். (அ-ம-20)

### யாழில்...

வழங்கப்படவுள்ள சொகுசு சுற்றுலாக் கப்பல் தயாரிக்கப்பட்டுள்ளது. சூரியமின் சக்தி வசதியைக் கொண்ட கப்பலின் பரீட்சார்த்தப் பயணம் காரை நகரில் நேற்று இடம்பெற்றது. (அ-ஒ-66)

### கிளிநொச்சி...

கந்தசாமி கோயில் முன்றிலில் காலை 9.30 மணிக்குத் தொடங்கி கிளிநொச்சி டிப்போச்சந்தி வரை இன்று பேரணியொன்று நடைபெறவுள்ளது. (அ-ஒ-26-66)

### சிறுமி படுகொலை...

சிறுமியின் படுகொலைக்குத் தாமதமின்றி நீதி கிடைக்கவேண்டும் எனக் கோரியும், விசேட நீதிபதிகள் அடங்கிய குழு இந்த வழக்கை விசாரிக்க வேண்டும் என்று வலியுறுத்தியும் மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

10 வயதான சிறுமி பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு கொல்லப்பட்ட விவகாரத்தில், சிறுமியின் சடலம் மீட்கப்பட்ட தென்னந்தோட்டத்தில் பணிபுரிந்த நபர் சந்தேகநபராகக் கைதுசெய்யப்பட்ட நிலையில், அவரை 48 மணிநேரம் பொலிஸ் காவலில் வைத்து விசாரிக்க கடந்த 17ஆம் திகதி நீதிமன்றம் அனுமதி வழங்கியது. சந்தேகநபர் நேற்று மீண்டும் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டார். இந்த நிலையிலேயே நீதிமன்றத்தின் முன்பாக ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. (அ-ம-56)

### பேருந்தின்...

அவர் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பேருந்திலிருந்து இறங்க முற்பட்டவேளை, சாரதி அவசரமாகப்பேருந்தை நகர்த்தியமையால், தவறி கீழே விழுந்துள்ளார். படுகாயமடைந்த அவர் உடனடியாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அங்கு அவர் உயிரிழந்துள்ளார். சாரதி ஊர்காவற்றுறைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (அ-ஒ-20-26-66-125)

### தேசிய மின்...

மேற்படி தீவுகளில் டீசல் இயந்திரம் மூலமே மின் உற்பத்தி இடம்பெறுகின்றது. கடற்படையினரிடம் டீசல் கொள்வனவு செய்யப்படுகின்றது. இதற்கு அதிக செலவாகின்றது. அத்துடன் இயந்திரச் சத்தம், புகை என்பன சூழலைப் பாதிக்கின்றன. இந்த நிலையில் அந்தத் தீவுகளைத் தேசிய மின் தடத்துடன் இணைப்பதன் மூலம் பல்வேறு பிரச்சினைகளுக்கும் தீர்வு எட்டப்படும் - என்றார். (அ-ஒ-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல்கள் நடத்தாமைக்கு நாம் பதிலளிக்கமுடியாது

## ம.உ. ஆணைக்குழுவின் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 20
நாட்டில் தேர்தல்கள் நடத்தப்படாமை எமது அதிகாரத்துக்கு உட்பட்டதல்ல. அது தொடர்பில் நான் பதிலளிக்கமுடியாது - இவ்வாறு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் தெஹிதெனிய தெரிவித்தார்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவுக்கும் சிவில் சமூகத்தினருக்குமிடையே சந்திப்பொன்று யாழ். நகரிலுள்ள திருமறைக்கலாமன்ற கலைத் தூது அழகியற் கல்லூரியில் இடம்பெற்றது. இதனைத் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

"இலங்கையில் தேர்தல்கள் நடத்தப்படாமல் இழுத்தடிக்கப்படுகின்றன. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் என்ற வகையில் இது மக்களின் வாக்களிக்கும் உரிமையை மீறுவதாகக் கருதவில்லையா?" என எழுப்பப்பட்ட கேள்விக்கே மேற்கண்டவாறு அவர் பதிலளித்துள்ளார். (அ-ஒ-20-125)

**பணிப்பெண் தேவை**
கொக்குவிலில் உள்ள வீடொன்றில் வயோதிபப் பெண் மற்றும் குழந்தையொன்றை வீட்டில் தங்கிநின்று பராமரிப்பதற்கு **பணிப்பெண் தேவை.**
கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.
075 899 5711
(CS/54054) J-1

## நிறைவேற்றதிகார ஒழிப்பு: நாமல் போர்க்கொடி!



கொழும்பு, பெப். 20
ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்கும் நோக்கில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்குவதற்கு முயற்சி எடுக்கப்படுமானால் அது ஏற்புடைய நடவடிக்கை அல்ல. அந்த முயற்சி வெற்றியும் அளிக்காது என்று நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையும், தேர்தல் முறைமையும் பின்னிப்பிணைந்துள்ளன. இவை இரண்டும் மாற்றப்படுமானால் அது பற்றிப் பரிசீலிக்கலாம். ஆனால் ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்கும் நோக்கில் இதற்கான ஏற்பாடு இடம்பெறுமானால் அது நீதியான நடவடிக்கை அல்ல. அந்த நடவடிக்கை வெற்றியும் அளிக்காது. தற்போதைய சூழ்நிலையில் மக்களுக்குப் பல பிரச்சினைகள் உள்ளன. அவற்றை மூடிமறைப்பதற்குகூட நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமை பற்றிப் பேசப்படலாம். மக்களின் பிரச்சினைகளுக்கே முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் - என்றார். (அ-ஒ-44)

## 'தொழில்நுட்ப வழிகாட்டி' நூல் வெளியீடு

வடக்கு மாகாண இலங்கைத் தொழில்நுட்பவியல் சேவையாளர் தொழிற்சங்கத்தால் தொழில்நுட்ப சேவை உத்தியோகத்தர்களுக்கான 'தொழில்நுட்ப வழிகாட்டி' கைநூல் வெளியிடப்படவுள்ளது.
இந்த நிகழ்வு எதிர்வரும் 22ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கைதடியில் அமைந்துள்ள வடக்கு மாகாண பிரதம செயலாளர் பணிமனைக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. சங்கத் தலைவர் பா.சுபாஸ்கரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர், வடக்கு மாகாண பிரதம செயலாளர் ஆகியோர் விருந்தினர்களாகப் பங்கேற்கவுள்ளனர். (ச)

**பெண் பணியாளர் தேவை**
யாழ் திருநெல்வேலி பல்கலைக் கழகத்திற்கு முன்னால் இயங்கும் Cafe ஒன்றிற்கு **பெண்** பணியாளர்கள் தேவை.
கருடா Cafe - 168, இராமநாதன் வீதி.
077 772 9978, 077 050 0008
(CS/54042) J-1

**காணி விற்பனைக்குண்டு**
யாழ்ப்பாணம், கொழும்புத்துறை சுவாமியார் வீதியில் அந்தோனியார் கோவிலில் இருந்து 350m தூரத்தில் 3 பரப்புக் காணியுடனான வீடு விற்பனைக்கு உண்டு. விலை பேசித் தீர்மானிக்கப்படும்.
(தரகர் தொடர்பு கொள்ள வேண்டாம்)
தொடர்புகளுக்கு:
077 965 2377, 077 571 0228

## கண்காட்சி

வடக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக மகளிர் நிலையத்தால் 'மனைப் பொருளியலும் கைவேலையும்' கண்காட்சி கூழாமுறிப்பு பொது நோக்கு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.
பிரதேச செயலக கிராம அபிவிருத்தி அலுவலர் நா.நந்தகுமார் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. (ச-500)

ஓம் விராட்விஸ்வப் பிரம்மனே நமஹ
**மரண அறிவித்தல்**

தோற்றம் 18 . 04 . 1948



மறைவு 18 . 02 . 2024

**கந்தையா சங்கரப்பிள்ளை**
(ஓய்வு பெற்ற இ.போ.ச. உத்தியோகத்தர் - காரைநகர்)

சுழிபுரம் பத்திரகாளி கோவிலடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சங்கரப்பிள்ளை அவர்கள் கடந்த 18.02.2024 ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - முத்தம்மா தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும், அண்ணாமலை - நாகரத்தினம் தம்பதிகளின் மருமகனும், நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், தயாளரூபன் (ஜேர்மனி), யசோதரன் (ஆசிரியர், யா/வலந்தலை வடக்கு அ.மி.த.க. வித்தியாலயம், காரைகர்), லம்போதரன் (இங்கிலாந்து), ஜெகதரன் (இங்கிலாந்து), யசோதா ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், தனுஷியா (ஜேர்மனி), கேதீஸ்வரி (ஆசிரியை, யா/ யாழ்ற்ரன் கல்லூரி, காரைநகர்), சசிகலா (இங்கிலாந்து), ஹேமலதா (இங்கிலாந்து), இந்திரகுமார் ஆகியோரின் அன்பு மாமனாரும், கயானன், கிரிஷிகா, தக்ஷயன், பவிஷயன், பானுஷன், சதுஷன், தர்ஷிவின் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.02.2024) புதன்கிழமை காலை 09.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் திருவடி நிலை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பத்திரகாளி கோவிலடி,
சுழிபுரம் கிழக்கு,
சுழிபுரம்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 977 3677
(CS 27968) S-1

## கூலித்தொழிலாளியை ஏற்றமறுத்த படகுப்பாதை!

யாழ்ப்பாணம், பெப். 20
ஊர்காவற்றுறை - காரைநருக்கு இடையேயான படகுப்பாதைச் சேவையில் பணியாற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபைப் பணியாளர்கள், பயணிகள் விடயத்தில் பாரபட்சத்துடன் நடக்கின்றனர் எனவும் இவ்விடயத்தில் வீதி அபிவிருத்தி அதிகாரசபை நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் பயணிகள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
பாதைச் சேவையின்போது தமக்குத் தெரிந்த பயணிகள் யாராவது தொலைபேசி ஊடாக அழைப்பு எடுத்து 'தாம் வருகின்றோம் சில நிமிடங்கள் காத்திருங்கள்' எனச் சொன்னால் ஏனைய பயணிகளை ஏற்றி வைத்துக்கொண்டு காத்திருந்து அவர்கள் வந்ததும் பாதையைச் செலுத்துகின்றனர்.
மேலும், தமக்கு வேண்டிய எவராவது, குறிப்பாக பெண்கள் தூரத்தே வந்தாலும் காத்திருந்து அவர்களை ஏற்றிச் செல்லும் பாதைப்பணியாளர்கள் ஏனையவர்கள் விடயத்தில் அவ்வாறு நடந்து கொள்வதில்லை என பயணிகள் குற்றம் சுமத்துகின்றனர்.
நேற்றுத் திங்கட்கிழமை காலை 8.45 மணிக்கு பாதை புறப்படவேண்டிய நேரமாகியும் கூட இரு பெண்களுக்காகக் காத்திருந்து ஏற்றிவிட்டு, ஊர்காவற்றுறைக்குச் செல்லவேண்டிய அப்பாவிக் கூலித் தொழிலாளி ஒருவர் கை காட்டியவாறு அருகில் வந்தும்கூட அவரை ஏற்றாமல் சென்றனர். இவர்களின் செயலைப் பார்த்துக்கொண்டிருந்த சில பயணிகள் பணியாளர்களிடம் நியாயம் கேட்டபோதும் அவர்கள் அந்தத் தொழிலாளியை ஏற்றாமலே சென்றனர்.
கடந்த வருடம் பாதையில் மதுபோதையில் பணியாற்றிய ஒருவர் பயணி ஒருவரைத் தாக்கியதை அடுத்து அவர் பணியில் இருந்து இடைநிறுத்தப்பட்டார். இதையடுத்து சீராகச் செயற்பட்ட பாதைப் பணியாளர்கள் தற்போது மீண்டும் பயணிகள் விடயத்தில் பாரபட்சம் காட்டத் தொடங்கியிருக்கின்றனர் எனவும் பயணிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.
இவ்விடயத்தில் வீதி அபிவிருத்தி அதிகாரசபை உயரதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஒ-இ)



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 20.02.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org